KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# தமிழ்மொழி

## BAHASA TAMIL
SEKOLAH KEBANGSAAN

ஆண்டு
TAHUN
4




KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR
(SEMAKAN 2017)
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
mendukung cita-cita hendak:

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden.

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

**(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)**

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# தமிழ்மொழி

## BAHASA TAMIL
SEKOLAH KEBANGSAAN

ஆண்டு TAHUN

# 4

*PENULIS*
SARMELLAA SANTIE RAJANDRAN
TAMIL ARASI SINNASAMY

*EDITOR*
SAMANTHI NADARAJAN

*PENGURUS PROJEK*
MUHAMMAD FAIZ MOHAMAD ALI

*PEREKA BENTUK*
MOGAN KUMAR RAJU

*ILUSTRATOR*
MOHD FAUZI MAHMOOD
MUHAMMAD SALLEH MAHMOOD

DBP
Dewan Bahasa dan Pustaka
Kuala Lumpur
2019

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No. Siri Buku: 0013

KK 495-221-0106041-49-2482-20101
ISBN 978-983-49-2482-9

Cetakan Pertama 2019
© Kementerian Pendidikan Malaysia 2019

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

Diterbitkan untuk
Kementerian Pendidikan Malaysia oleh:
Dewan Bahasa dan Pustaka,
Jalan Dewan Bahasa,
50460 Kuala Lumpur.
Telefon: 03-21479000 (8 talian)
Faksimile: 03-21479643
Laman Web: http://www.dbp.gov.my

Reka Letak dan Atur Huruf:
Firdaus Press Sdn. Bhd.

Muka Taip Teks: Anjal InaiMathi
Saiz Muka Taip Teks: 18 poin

Dicetak oleh:
Maziza Sdn. Bhd.,
No. 9 & 11, Jalan 111 (Helang Sewah),
Kepong Baru,
52100 Kuala Lumpur.

# PENGHARGAAN

Penerbitan pakej buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada pihak berikut:

- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu, Dewan Bahasa dan Pustaka.
- Jawatankuasa Pembaca Luar, Dewan Bahasa dan Pustaka.
- SK Taman Senangan, Butterworth, Pulau Pinang.
- SJKT Teluk Merbau, Sungai Pelek, Selangor.
- Institut Pendidikan Guru, Kampus Raja Melewar, Seremban, Negeri Sembilan.
- SJKT Effingham, Selangor.
- SK Ayer Keroh, Melaka.
- SK Alor Gajah 1, Melaka.
- UMA Publications, Kuala Lumpur.
- Dr. Murasu Nedumaran, Klang, Selangor.

# உள்ளடக்கம்


முன்னுரை v

**தொகுதி 1 சுற்றுச்சூழல்**

1 நலம் காப்போம் 1
2 பொருள் அறிவோம் 2
3 புதிய வாழ்வு 4
4 செய்யுளும் மொழியணியும் 5

**தொகுதி 2 கதை**

1 தீங்கு எண்ணாதே 7
2 உயர்வெண்ணம் 8
3 என் கதை 10
4 இலக்கணம் 12

**தொகுதி 3 செய்திகள்**

1 தலைப்புச் செய்திகள் 13
2 புது வரவு 14
3 வட்டாரச் செய்திகள் 15
4 செய்யுளும் மொழியணியும் 17

**தொகுதி 4 உயிரினங்கள்**

1 அறிமுக விழா 19
2 ஒட்டகச்சிவிங்கி 20
3 மீன் காட்சியகம் 22
4 இலக்கணம் 23

**தொகுதி 5 கட்டடக்கலை**

1 கூடைக் கட்டடம் 25
2 அதிசயங்கள் ஏழு 26
3 சாய்ந்த கோபுரம் 27
4 செய்யுளும் மொழியணியும் 28

**தொகுதி 6 அறிவுடைமை**

1 மின்னூல் 29
2 சிரிக்க சிந்திக்க 30
3 கற்றல் இனிது 32
4 இலக்கணம் 34

**தொகுதி 7 விவசாயம்**

1 சந்தை 35
2 உள்நாட்டுப் பழங்கள் 36
3 பயணம் இனிது 37
4 செய்யுளும் மொழியணியும் 38

**தொகுதி 8 மனமகிழ்**

1 விளையாட்டு 39
2 சீனப் பெருஞ்சுவர் 41
3 இனிய அனுபவம் 42
4 இலக்கணம் 43

**தொகுதி 9 கல்வி**

1 நூலகம் 45
2 சுற்றுச்சூழல் 46
3 எதிர்கால ஆசை 47
4 செய்யுளும் மொழியணியும் 48

**தொகுதி 10 நிகழ்ச்சிகள்**

1 சுற்றுலாச் சந்தை 49
2 விண்வெளிக் கண்காட்சி 50
3 பரிசு யாருக்கு 52
4 செய்யுளும் மொழியணியும் 53

## தொகுதி 11 மனம் கவர்ந்தவை

1 கேட்டதில் ரசித்தது 55
2 புதிய தேடல் 56
3 என் தேவதை 57
4 இலக்கணம் 58

## தொகுதி 12 தகவல் யுகம்

1 உலகச் செய்திகள் 59
2 வானிலைச் செய்திகள் 60
3 தகவல் அறிக 61
4 செய்யுளும் மொழியணியும் 62

## தொகுதி 13 பண்பாடு

1 இசை அமுது 63
2 மலரும் மொட்டு 64
3 இன்னிசை விழா 66
4 இலக்கணம் 68

## தொகுதி 14 விழிப்புணர்வு

1 இன்றைய அறிவிப்பு 69
2 நல்வாழ்வு 71
3 கதைப் பெட்டி 73
4 செய்யுளும் மொழியணியும் 74

## தொகுதி 15 ஒற்றுமையுணர்வு

1 எங்களை அறி 75
2 யார் சிறந்தவர் 76
3 திறந்த இல்லம் 77
4 செய்யுளும் மொழியணியும் 78

## தொகுதி 16 உணவும் நலமும்

1 அறிந்து கொள்வீர் 79
2 உணவுகள் பலவிதம் 80
3 உணவே மருந்து 82
4 செய்யுளும் மொழியணியும் 84

## தொகுதி 17 பாரம்பரியம்

1 ரசிக்க ருசிக்க 85
2 நெய்தல் கலை 87
3 அனுபவம் புதிது 89
4 இலக்கணம் 90

## தொகுதி 18 காலங்கள்

1 எங்கள் நேரம் 91
2 பருவங்கள் நான்கு 92
3 மாதங்கள் அறிவோம் 93
4 செய்யுளும் மொழியணியும் 94

## தொகுதி 19 சுட்டிகள் உலகம்

1 நீச்சல் குளம் 95
2 அரும்புகள் விழா 96
3 காத்திருந்த நேரம் 98
4 செய்யுளும் மொழியணியும் 100

## தொகுதி 20 சுகாதாரம்

1 மலை ஏறுவோம் 101
2 தூய்மை 102
3 பார்த்தாலே பரவசம் 103
4 இலக்கணம் 104

## தொகுதி 21 சமூகம்

1 இது சரியா 105
2 பூமி நேரம் 106
3 வங்கி 107
4 இலக்கணம் 108

## தொகுதி 22 நம்மைச் சுற்றி

1 அப்பா என் உயிர் 109
2 அறிஞர்களை அறிவோம் 110
3 சிறு தொழில் 111
4 இலக்கணம் 112
மீட்டுணர்வோம் 113



KPM

# முன்னுரை

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை*

நான்காம் ஆண்டுக்கான தமிழ்மொழிப் பாடநூல் தேசியக் கல்வித் தத்துவத்தையும் தொடக்கப்பள்ளிக்கான சீரமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்ட தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் மொத்தம் இருபத்து இரண்டு தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் நான்கு பாடங்கள் அமைந்துள்ளன. முதல் மூன்று பாடங்கள் முறையே கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து எனவும் நான்காவது பாடம் செய்யுளும் மொழியணியும் அல்லது இலக்கணம் எனவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. கருப்பொருள் அடிப்படையில் பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டிற்கான திறன்களை அடையும் வண்ணம் மனத்தைக் கவரும் வண்ணப் படங்களும் QR குறியீடுகளும் ஆக்கப்பூர்வமான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் ஆசிரியர் குறிப்பும் வழங்கப்பட்டுள்ளன. அறிவார்ந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கவும் சிறந்ததொரு விளைப்பயனை அடையவும் இந்நூல் துணையாகும்.

எனவே, இப்பாடநூலை ஆசிரியர்கள் முறையாகப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலைத் திறம்பட மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

***எழுமின் விழுமுன் குறிசாரும்வரை நில்லாது செல்மின்!***

நன்றி,

**ஆசிரியர்கள்**

கீழ்க்காணும் படச்சின்னங்கள் மாணவர்களை ஈர்க்கும் பொருட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.



கேட்டல் பேச்சு



வாசிப்பு



எழுத்து



செய்யுளும் மொழியணியும்



இலக்கணம்



உயர்நிலைச் சிந்தனைத் திறன்

கற்றல் தரம்
1.2.3

கற்றல் தரம்

KPM

பக்க எண்

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் குறிப்பு

QR நோக்குக் குறியீடு

QR செயலியைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தவும்.

# தொகுதி 1 சுற்றுச்சூழல்

## பாடம் 1 நலம் காப்போம்

**செவிமடுத்துக் கூறிடுக.**




வணக்கம்.
முக்கிய அறிவிப்பு.
**‘நெகிழிப் பைகளுக்குத் தடை’**
ஜனவரி 1 முதல் இத்தடை அமலுக்கு வருகிறது. அன்பார்ந்த வாடிக்கையாளர்களே, பொருள் வாங்க வரும்போது பைகளை உடன் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறோம்.



நெகிழிப் பையைத் தவிர்ப்போம்;
சுற்றுச்சூழலைக் காப்போம்.

நன்றி

**பிந்தாங் பேரங்காடி**

| | |
|---|---|
| கற்றல் தரம் 1.2.8 | ▪ செவிமடுத்த அறிவிப்பைக் கூறுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • செவிமடுத்த அறிவிப்பை மீண்டும் கூறப் பணித்தல். |

## பாடம் 2 பொருள் அறிவோம்

**வாசித்து அறிந்திடுக.**

1. தேடப்படும் சொல்லின் முதல் எழுத்தை அறிதல் வேண்டும்.

2. **அகிலம்** என்ற சொல்லின் முதல் எழுத்து **அ**. எனவே, அகர வரிசையில் தேடுதல் வேண்டும்.




3. தேடும் சொல்லின் பொருள் அதன் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். **அகிலம்** என்பதன் பொருள் **பூமி** ஆகும்.



கற்றல் தரம் 2.5.1 • அகராதியின் துணை கொண்டு சொல்லின் பொருளை அறிவர்.

ஆசிரியர் குறிப்பு • அகராதி பயன்படுத்தும் முறை அறிய வழிகாட்டுதல்.

## நடவடிக்கை 1 பொருள் எழுதி வாசித்திடுக.

**கையகராதி**

**க**

**கடல்** சமுத்திரம்

**காடு** வனம்

**கிளிஞ்சல்** சிப்பி

**குருதி** ரத்தம்

**த**

**தீர்ப்பு** முடிவு

**துக்கம்** சோகம்

**தூய்மை** சுத்தம்

**தேகம்** உடல்

**ந**

**நூல்** புத்தகம்

**நெட்டை** உயரம்

**நேசம்** அன்பு

**நோன்பு** விரதம்

**ப**

**பிதா** தந்தை

**பூ** மலர்

**பெருமை** மேன்மை

**பொழுது** காலம்

1. நெட்டை = உயரம்
2. குருதி = ______
3. துக்கம் = ______
4. பொழுது = ______
5. கடல் = ______
6. தூய்மை = ______
7. நேசம் = ______
8. காடு = ______

## நடவடிக்கை 2 அகராதியின் துணை கொண்டு சொல்லின் பொருளை எழுதி வாசித்திடுக.


1. அம்புலி = நிலா
2. காசு = ______
3. சாதம் = ______
4. பரவை = ______

கற்றல் தரம் 2.5.1 • அகராதியின் துணை கொண்டு சொல்லின் பொருளை அறிவர்.

ஆசிரியர் குறிப்பு • மாதிரி அகராதியைத் தயாரித்துப் பயன்படுத்தத் தூண்டுதல்.

## பாடம் 3 புதிய வாழ்வு

**கோவையாக எழுதிடுக.**




- பூக்களைப் பறிக்கக் கூடாது.
- மிருகங்களை வதைக்கக் கூடாது.
- மனிதர்களிடம் அன்பு கொள்ளவும்.

உங்கள் பாதுகாப்பு உங்கள் பொறுப்பு என்பதை மறவாதீர்கள்.

பூமியில் தரை இறங்கியதும் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிகள். அங்குள்ள பூக்களைப் பறித்தல் கூடாது. மேலும், ________ தவறான செயலாகும். அடுத்து, ________ கொள்ளுதல் வேண்டும். இறுதியாக, ________ என்பதை மறக்கக் கூடாது.




கற்றல் தரம் 3.4.4 ▪ அறிவிப்பிலுள்ள விவரங்களைக் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • கோவையாக எழுதும் போது இடைச்சொற்களின் பயன்பாட்டை வலியுறுத்துதல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**





| | |
|---|---|
| **கொன்றை வேந்தன்** | **எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.** |
| **பொருள்** | எண்களையும் மொழியையும் நமது இரு கண்களுக்கு ஒப்பானதாகக் கருத வேண்டும். |

கற்றல் தரம் 4.2.4 ▪ நான்காம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • பட்டிமன்றத்தை வகுப்பறையில் நடத்தச் செய்தல்.

**நடவடிக்கை 1** **கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் எழுதிடுக.**







கொன்றை வேந்தன்

______________________________

பொருள்

______________________________

______________________________



**நடவடிக்கை 2** **கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறி எழுதிடுக.**

| | |
|---|---|
| கற்றல் தரம் 4.2.4 | ▪ நான்காம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் புத்தகக் குறியீடாகச் செய்து பார்வைக்கு வைக்கப் பணித்தல். |

# தொகுதி 2 கதை

## பாடம் 1 தீங்கு எண்ணாதே

**செவிமடுத்துக் கூறிடுக.**



குட்டிக் கதை சொல்லவா?

ம்ம்ம்... யானைக் கதை சொல்லுங்க.



யானை ஒன்று இருந்தது. அது வித்தைகள் பல செய்து மக்களைக் கவர்ந்தது.

ஒருநாள் சலவைக்காரன் முத்து யானையிடம் வம்பு செய்ய எண்ணினான். தேங்காய் மூடியினுள் ஊசி ஒன்றை வைத்தான். அதைத் தின்னச் சொல்லி யானையிடம் நீட்டினான்.

யானை அவனின் தீய எண்ணத்தை அறிந்தது. உடனே, ஆற்றோரம் நடந்து சென்றது; சேற்றை அள்ளி அவன் மீது வீசியது. ஐயோ, பாவம்! அவன் கையில் வைத்திருந்த துணி மூட்டையும் வீணாகியது.




வருடுக

கற்றல் தரம் 1.2.9 ▪ செவிமடுத்த கதையைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • QR குறியீட்டின் துணையுடன் கதையைக் கேட்டுக் கூறச் செய்தல்.

பாடம் 2

# உயர்வெண்ணம்



**வாசித்திடுக.**

ஒரு நாள் பருந்து ஒன்று புறாவைத் துரத்தியது. புறா சிபி மன்னரிடம் அடைக்கலம் நாடியது.









கற்றல் தரம் 2.3.7

- கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- கதையைப் பல்வேறு தொனியில் வாசித்து நடிக்கச் செய்தல்.

# பாடம் 3 என் கதை

**குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**



நாளையே நடனம் **கற்று**க் கொள்கிறேன்.
இன்று **காற்று** பலமாக வீசுகிறது.



என் **முட்டை**களை **மூட்டை**யில்
எடுத்துச் செல்கிறார்களே!



என் **பல்**லைப் பிடுங்கி விட்டார்கள்.
இனி **பால்**தான் குடிக்க வேண்டும்.

**கற்று** : ஆசிரியர் கணிதப் பாடம் **கற்று**த் தருகிறார்.

**காற்று** : தென்றல் **காற்று** இதமாக வீசியது.

| | |
|---|---|
| **பல்** : ________ | **முட்டை** : ________ |
| **பால்** : ________ | **மூட்டை** : ________ |

கற்றல் தரம் 3.3.13 ▪ குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு • வாக்கியம் அமைத்து நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

## நடவடிக்கை 1

**சொற்களை முறைப்படுத்தி வாக்கியம் அமைத்திடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சென்றோம். | மலைக்குச் | நேற்று | கெந்திங் |

நேற்று கெந்திங் மலைக்குச் சென்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நாங்கள் | உடற்பயிற்சி | செய்தோம். | மாலையில் |
| 3. | நகம் | அகிலாவின் | கூர்மையாக | இருந்தது. |
| 4. | நாகத்தைப் | பார்த்து | ஓடினர். | சிறுவர்கள் |

## நடவடிக்கை 2

**குறில், நெடில் சொற்களை அடையாளங்கண்டு வாக்கியம் அமைத்திடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| க | லை | க | கூ | கா |
| மு | சா | ட் | டை | ர |
| க | னு | கா | லை | ம் |
| ர | கு | டை | மூ | ட |
| ம் | ச | ட் | டை | டை |



கலை ▶ முகிலா பரதக் கலையில் சிறந்தவள்.

கற்றல் தரம் 3.3.13
- குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.


ஆசிரியர் குறிப்பு
- வேறு சில குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

### மூன்றாம் வேற்றுமை உருபு அறிவோம்





| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | • கோயில் **முகிலனால்** கட்டப்பட்டது.<br>• தம்பி **முகிலனோடு** கடைக்குச் சென்றான். |

### நடவடிக்கை 1 சேர்த்து எழுதிடுக.

1. பவானி + ஆல் = **பவானியால்**
2. அத்தை + ஒடு = ______
3. அம்மா + உடன் = ______
4. விமலன் + ஒடு = ______

### நடவடிக்கை 2 வேற்றுமை உருபை இணைத்து எழுதிடுக.

1. **பூவிழியோடு** அப்பா விளையாடச் சென்றார். (பூவிழி)
2. தர்சினி வீட்டை ______ அலங்கரித்தாள். (விளக்கு)
3. சசி தன் ______ வீட்டிற்கு வந்தான். (அத்தை)
4. அமார் ______ மருத்துவமனைக்குச் சென்றான். (பாட்டி)



கற்றல் தரம் 5.2.7 ▪ மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு • மூன்றாம் வேற்றுமை உருபைச் சரியாகப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.

# தொகுதி 3 செய்திகள்



## பாடம் 1 தலைப்புச் செய்திகள்

**செவிமடுத்துக் கூறிடுக.**



வணக்கம்.
காலை மணி 10.00.
செய்திகள் வாசிப்பவர் சாருமதி.

**தலைப்புச் செய்திகள்.**

- பள்ளிப் பேருந்துக் கட்டணம் உயர்வு. பெற்றோர் எதிர்ப்பு.
- பூச்சோங் நெடுஞ்சாலை சீரமைப்புப் பணி நிறைவு. அடுத்த வாரம் திறப்பு விழா.
- தென்சீனக் கடலில் பலத்த காற்று. மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை.
- அனைத்துலக உணவுச் சந்தையில் நூறு அடி தோசை. புதிய சாதனை.

கற்றல் தரம் 1.2.10
- செவிமடுத்த செய்தியைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு
- செவிமடுத்த செய்தியை நண்பரிடம் கூறச் செய்தல்.

பாடம் 2 புது வரவு

வாசித்திடுக.

மலேசிய சுடரொளி மக்கள் ஏடு

பிப்ரவரி 13, புதன்கிழமை

# ஆகாய வாடகை ஊர்தி கனவை நனவாக்கும் பெல் சுழலூர்தி நிறுவனம்

நியூயார்க், பிப்ரவரி 12



வீதிகளில் போக்குவரத்து நெரிசலா? இதற்கு ஆகாய வாடகை ஊர்தி ஒரு தீர்வு. “இந்தக் கனவை நனவாக்கும் காலம் வெகு தூரம் இல்லை,” என்கிறார் பெல் சுழலூர்தி நிறுவன உரிமையாளர்.

இந்நிறுவனம் ஆகாய வாடகை ஊர்திக்கான மாதிரியை அறிமுகம் செய்துள்ளது. இந்த ஊர்தி விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் தரம் 2.3.10

- செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- வானொலிச் செய்தியாக மாற்றி வாசிக்கச் செய்தல்.

# பாடம் 3 வட்டாரச் செய்திகள்

**உயர்திணை, அஃறிணை சொற்களை அடையாளம் கண்டு வாக்கியம் அமைத்திடுக.**




| | | |
|---|---|---|
| பாண்டியன் | : | **பாண்டியன்** திடலில் பந்து விளையாடினான். |
| கோழிகள் | : | **கோழிகள்** இரை தேடின. |

கற்றல் தரம் 3.3.14
- உயர்திணை, அஃறிணைக்கேற்ப வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- தலைப்புச் செய்திகளில் இடம் பெற்றிருக்கும் உயர்திணை, அஃறிணை சொற்களுக்கு வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

## நடவடிக்கை 1

**மாற்றீட்டு அட்டவணை துணையுடன் வாக்கியங்கள் அமைத்திடுக.**



| | | |
|---|---|---|
| கவிதா | புத்தகம் | செய்கிறான். |
| புலி | எழுத | உதவும். |
| மாணவர்கள் | பயணம் | துரத்தியது. |
| இனியன் | மானைத் | தருகின்றன. |
| மரங்கள் | நிழல் | வாங்கினாள். |
| பேனா | நடனம் | ஆடினார்கள். |



▶ கவிதா புத்தகம் வாங்கினாள்.

## நடவடிக்கை 2

**வாக்கியம் அமைத்திடுக.**

| | | |
|---|---|---|
| வளையல் | நடிகன் | பேனா |
| சாந்தினி | கரடி | தோழி |

வளையல் ▶ அக்காள் தங்க வளையல் அணிந்தார்.



கற்றல் தரம் 3.3.14
- உயர்திணை, அஃறிணைக்கேற்ப வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- மாற்றீட்டு அட்டவணை துணையுடன் வாக்கியங்கள் அமைத்து நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

### இரட்டைக்கிளவி



**தடதட** - வன்மையான ஒலியுடன் கூடிய செயல்

சுடர்மதியின் வீட்டுக்கதவை கதிரவன் **தடதட**வென்று தட்டினான்.



**மடமட** - விரைந்து சரிதல்

பாழடைந்த கட்டடம் **மடமட**வென இடிந்து விழுந்தது.

| கற்றல் தரம் 4.3.3 | ▪ நான்காம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • இரட்டைக்கிளவியை ஏற்றுள்ள வாக்கியத்தைக் கையெழுத்தாக எழுதச் செய்தல். |

## நடவடிக்கை


**இரட்டைக்கிளவியை எழுதி வாக்கியத்தை நிறைவு செய்திடுக.**




1. இராணுவ வீரர்கள் பயிற்சியின்போது ________ வென்று ஓடினர்.



2. நில அதிர்வால் கட்டடங்கள் ________ வெனச் சரிவதைக் கண்டேன்.



3. மோகனா ________ வென்று கதவைத் தட்டினாள்.



4. கண்ணாடிப் பாத்திரங்கள் ________ வெனச் சரிந்து விழுந்து நொறுங்கின.




கற்றல் தரம் 4.3.3 • நான்காம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு • இரட்டைக்கிளவியையும் விளக்கத்தையும் காகிதத் தட்டில் அழகுற எழுதிப் பார்வைக்கு வைத்தல்.


# தொகுதி 4 உயிரினங்கள்

## பாடம் 1 அறிமுக விழா

**கலந்துரையாடுக.**




1. சிங்கம் உரக்கக் **கர்ஜித்தது**.
2. குயில் இனிமையாகக் ______.
3. காகம் ______.





கற்றல் தரம் 1.3.10
- கூவும், கரையும், கர்ஜிக்கும், சீறும், பிளிரும், கத்தும், குரைக்கும் ஆகிய ஒலிமரபுச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- ஒலிமரபுச் சொற்களைப் பயன்படுத்திப் பேசச் செய்தல்.

## பாடம் 2 ஒட்டகச்சிவிங்கி

**வாசித்துப் பதிலளித்திடுக.**

ஒட்டகச்சிவிங்கி விலங்குகளில் மிக உயரமானது. இதன் உயரம் ஏறக்குறைய 6 மீட்டர் ஆகும். இஃது ஆப்பிரிக்காவில் உள்ள சவானா காட்டில் அதிகம் காணப்படும். அடிவயிற்றைத் தவிர உடலின் மற்றப் பாகங்கள் முழுவதும் புள்ளிகள் இருக்கும். இரவில் நின்றபடியே 4 மணி நேரம் தூங்கும். பிறந்த சில மணி நேரத்திலேயே எழுந்து ஓடக் கூடியது. நான்கு திசைகளையும் பார்க்கும் வல்லமை இதற்கு உண்டு. ஒட்டகச்சிவிங்கியின் உணவு இலைகள், தழைகள், கனிகள் ஆகும். இஃது ஒரு வாரம் வரை நீர் அருந்தாமல் சமாளிக்கும் தன்மை உடையது.



**என்னைப் பற்றி**

| | | |
|---|---|---|
| உயரம் | – | 4 – 6 m |
| எடை | – | 900 kg |
| இருதயம் | – | 10 kg |
| நாக்கு | – | 45 – 50 cm |
| ஆயுட்காலம் | – | 26 – 28 வருடம் |
| உணவு | – | தினம் 20 kg இலை, தழை |

வருடுக

**இடம்**

சவானா காடுகள்



**உணவு**

______

**உயரம்**

______

______

26 வருடம்

______

900 kg


| எண் | ஒட்டகச்சிவிங்கி | ஆம் ✓ | இல்லை ✗ |
|---|---|---|---|
| 1. | உலகின் மிக உயரமான விலங்கு. | ✓ | ______ |
| 2. | அடிவயிற்றில் அதிகமான புள்ளிகள் இருக்கும். | ______ | ______ |
| 3. | நின்றபடியே 10 மணி நேரம் தூங்கும். | ______ | ______ |
| 4. | குட்டி, பிறந்த சில மணி நேரத்திலேயே ஓடும். | ______ | ______ |
| 5. | ஏழு நாள்கள் வரை நீர் அருந்தாமல் இருக்கும். | ______ | ______ |

கற்றல் தரம் 2.2.6
- பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

ஆசிரியர் குறிப்பு
- மிருகங்கள் தொடர்பான பத்தியை வாசித்துக் குறிப்பெடுக்கச் செய்தல்.

பாடம் 3

# மீன் காட்சியகம்



**கோவையாக எழுதிடுக.**

மீன் காட்சியகம் செல்வது என்னுடைய நீண்ட நாள் ஆசை. கடந்த பள்ளி விடுமுறையில் அங்குச் சென்றேன்.

**நாள்குறிப்பு: 15.03.20xx**

| | | |
|---|---|---|
| காலை மணி 8:00 | : | குடும்பத்தினரோடு ஆவலுடன் புறப்பட்டேன். |
| காலை மணி 10:00 | : | அப்பா நுழைவுச்சீட்டு வாங்கியவுடன் உள்ளே நுழைந்தோம். |
| காலை மணி 10:15 | : | கண்ணாடித் தொட்டிகளில் கண்கவர் வண்ண மீன்களைக் கண்டோம். |
| காலை மணி 11:30 | : | டால்பின் சாகசக் காட்சிகளைக் கண்டு களித்தோம். |
| நண்பகல் மணி 1:00 | : | அற்புதமான மீன் காட்சியகம் கண்ட மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம். |



கடந்த பள்ளி விடுமுறையில் மீன் காட்சியகம் சென்றேன். குடும்பத்தினரோடு ஆவலுடன் புறப்பட்டேன். அப்பா நுழைவுச்சீட்டு வாங்கியவுடன் உள்ளே நுழைந்தோம்.

கற்றல் தரம் 3.4.7 ▪ அனுபவத்தை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • வாக்கியங்களைக் கோவையாக நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**



அதோ அந்தப் பறவை போல
வாழ வேண்டும்



இதோ இந்தக் கிளிகள் போல
பேச வேண்டும்

ஒரே தொனியிலே ஒரே குரலிலே
வலிமிகும் இலக்கணத்தைப் பாடுவோம்!



எந்தச் சட்டை உனது சட்டை
என்று சொல்லிடு



எந்தப் பாடம் உனக்குப் பிடிக்கும்
என்று கூறிடு

ஒரே தொனியிலே ஒரே குரலிலே
வலிமிகும் இலக்கணத்தைப் பாடுவோம்!



அதோ அந்தத் தேனீ போல
வாழ வேண்டும்



இதோ இந்தக் குருவி போல
பறக்க வேண்டும்

ஒரே தொனியிலே ஒரே குரலிலே
வலிமிகும் இலக்கணத்தைப் பாடுவோம்!

(சில மாற்றங்களுடன்)

| | |
|---|---|
| கற்றல் தரம் 5.4.2 | ▪ அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| ஆசிரியர் குறிப்பு | • பாடலை அபிநயத்துடன் பாடச் செய்தல். |

## வலிமிகும் இடங்கள்

- சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.
- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால்தான் வல்லினம் மிகும்.
- அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அந்த | + | பையன் | = | அந்தப் பையன் |
| இந்த | + | தலைவன் | = | இந்தத் தலைவன் |
| எந்த | + | குழந்தை | = | எந்தக் குழந்தை? |

### நடவடிக்கை 1 சேர்த்து எழுதிடுக.

1. அந்த + கயிறு = அந்தக் கயிறு
2. இந்த + தூண்டில் = ______
3. எந்த + குயில் = ______
4. எந்த + படம் = ______
5. அந்த + சின்னம் = ______
6. இந்த + பூனை = ______

### நடவடிக்கை 2 வலிமிகுந்து எழுதிடுக.

1. உனக்கு எந்த பொம்மை வேண்டும்?

   உனக்கு **எந்தப் பொம்மை** வேண்டும்?

2. அந்த காட்டில் உயரமான மரங்கள் உள்ளன.
3. இந்த தங்க மோதிரம் அழகாக உள்ளது.




கற்றல் தரம் 5.4.2
- அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் சொற்களைப் பட்டியலிடச் செய்தல்.

# தொகுதி 5 கட்டடக்கலை

## பாடம் 1 கூடைக் கட்டடம்

**கலந்துரையாடுக.**




- அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தில் நெவார்க் நகரில் அமைந்துள்ளது.
- கட்டி முடிக்க ஏறத்தாழ இரண்டாண்டுகள் ஆயின.
- கட்டடக்கலைக்கான பல விருதுகள் பெற்றது.

கற்றல் தரம் 1.3.7
- தனிப்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- கூடைக் கட்டடம் தொடர்பான கூடுதல் விவரங்களைச் சேகரித்துப் பேசச் செய்தல்.

## பாடம் 2 அதிசயங்கள் ஏழு

**கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**




1. படம் எதனைக் காட்டுகிறது?

   **படம் உலகின் ஏழு அதிசயங்களைக் காட்டுகிறது.**

2. இப்புத்தகத்தை எழுதியவர் யார்?
3. எந்தப் பதிப்பகம் புத்தகத்தை வெளியிட்டது?
4. படத்தில் காணும் உலக அதிசயங்கள் யாவை?
5. தாஜ்மஹால் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
6. இவை ஏன் புகழ் பெற்றதாகக் கருதப்படுகின்றன?

வருடுக

கற்றல் தரம் 2.4.6 • தனிப்படத்தையொட்டிய கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • உலக அதிசயங்களின் படங்களைத் திரட்டி திரட்டேடு செய்யப் பணித்தல்.

## பாடம் 3 சாய்ந்த கோபுரம்

**வாக்கியம் அமைத்திடுக.**




பெயர் : பீசா சாய்ந்த கோபுரம்

இடம் : இத்தாலி

வருடம் : 1178

உயரம் : 55.86 மீட்டர்

மாடி : 7



பெயர் : தெலுக் இந்தான் சாய்ந்த கோபுரம்

இடம் : தெலுக் இந்தான்

வருடம் : 1885

உயரம் : 25.9 மீட்டர்

மாடி : 7

1. இஃது ஓர் உயர்ந்த கட்டடம்.
2. இதன் பெயர் பீசா சாய்ந்த கோபுரம்.
3. இந்தக் கோபுரம் இத்தாலியில் அமைந்துள்ளது.
4. இக்கட்டடம் 1178இல் கட்டப்பட்டது.
5. இதன் உயரம் 55.86 மீட்டர் ஆகும்.
6. இதில் மொத்தம் 7 மாடிகள் உள்ளன.

**நடவடிக்கை** **தெலுக் இந்தான் சாய்ந்த கோபுரம் தொடர்பான வாக்கியம் அமைத்திடுக.**

கற்றல் தரம் 3.3.15 ▪ தனிப்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு • தெலுக் இந்தான் சாய்ந்த கோபுரம் தொடர்பான வாக்கியம் அமைக்க வழிகாட்டுதல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




| | | |
|---|---|---|
| **இணைமொழி** | **அரை குறை** | **ஆடல் பாடல்** |
| **பொருள்** | முழுமை பெறாத நிலை | பாட்டும் நடனமும் / பாட்டும் கூத்தும் |

**நடவடிக்கை** **இணைமொழியை எழுதிடுக.**

1. பொங்கல் விழாவில் ________ நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.
2. ________ யாகப் பாடங்களைச் செய்த மாணவர்களை ஆசிரியர் கண்டித்தார்.
3. நாங்கள் தொலைக்காட்சியில் ________ நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தோம்.
4. சாமந்தி தன் வேலைகளை ________ யாகச் செய்வதை விரும்பமாட்டாள்.

கற்றல் தரம் 4.4.3 • நான்காம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு • சூழலைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.

தொகுதி 6

# அறிவுடைமை

## பாடம் 1 மின்னூல்

**செவிமடுத்துக் கருத்துகளைக் கூறிடுக.**






| | |
|---|---|
| கற்றல் தரம் 1.2.11 | ▪ செவிமடுத்த உரையாடலில் உள்ள கருத்துகளைக் கூறுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • உரையாடலையொட்டிய கூடுதல் கருத்துகளைக் கூறச் செய்தல். |

பாடம் 2

# சிரிக்க சிந்திக்க

**வாசித்திடுக.**





கற்றல் தரம் 2.3.5


- உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- உரையாடலைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.

**நடவடிக்கை** **வாசித்திடுக.**




| | |
|---|---|
| கற்றல் தரம் 2.3.5 | ▪ உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். |
| ஆசிரியர் குறிப்பு | • உரையாடலைச் சரியாக வாசிப்பதை உறுதி செய்தல். |

## பாடம் 3 கற்றல் இனிது

**எதிர்ச்சொற்களை அறிந்திடுக.**

**காலை** எழுந்து வந்தேன்;
**மாலை** வரையில் நடந்தேன்!

**கீழே** இருந்து மலையின்
**மேலே** ஏறிச் சென்றேன்!

**வெயிலில்** வெந்து காய்ந்தேன்;
**மழையில்** ஊறி நனைந்தேன்!

மேட்டில் ஏற முயன்றேன்;
பள்ளம் விழுந்து துடித்தேன்!

பகலில் தேடி அலைந்தேன்;
இரவு வரையில் தொடர்ந்தேன்!

தாயைப் பிரிந்த எனது
சேயைக் காண வில்லை!

இன்று தோல்வி கண்டேன்;
நாளை மீண்டும் முயல்வேன்!



பிரிந்த கன்றைக் காண்பேன்;
சேர்ந்து மகிழ்ச்சி கொள்வேன்!

தோல்வி விட்டே ஓடும்;
வெற்றி வந்து கூடும்!

*(பாவலர் முரசுநெடுமாறன்)*



1. காலை X மாலை
2. கீழே X மேலே
3. வெயில் X மழை

**நடவடிக்கை** **எதிர்ச்சொல்லை எழுதிடுக.**

1. அழுகை X **சிரிப்பு**
2. சுத்தம் X ______
3. பிறப்பு X ______
4. ______ X நெட்டை
5. ______ X வெளியே
6. நண்பன் X ______
7. ______ X ஏழை
8. புதிய X ______

| | | | |
|---|---|---|---|
| இறப்பு | குட்டை | **சிரிப்பு** | அசுத்தம் |
| பகைவன் | பழைய | உள்ளே | பணக்காரன் |

கற்றல் தரம் 3.2.27
- எதிர்ச்சொற்களை அறிந்து எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- கவிதையைப் பாடலாகப் பாடச் செய்தல்.

# பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

பேசுவோரின் இடத்தைக் குறிப்பது இடம்.
இடம் மூவகைப்படும். அவை:-


தன்மை | முன்னிலை | படர்க்கை

**தன்மை**

பேசுபவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் பெயர்கள் தன்மை எனப்படும்.

நான், என், நாங்கள், எங்கள், யான், யாம்

**நான்** பாடம் படித்தேன்.



**முன்னிலை**

பேசுபவர் முன்னால் நின்று கேட்பவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் பெயர்கள் முன்னிலை எனப்படும்.

நீ, நீங்கள், உன், உமது, நீர், நீவீர், உங்கள்

**உன்** பெயர் என்ன?

**நடவடிக்கை** **நிறைவு செய்திடுக.**

தன்மை

_____ பாடல் பாடினேன்.
_____ வீடு பெரியது.
_____ திடலுக்குச் சென்றோம்.

முன்னிலை

_____ தோழிக்கு எத்தனை வயது?
_____ எப்போது வந்தீர்கள்?
_____ எங்கு வசிக்கிறாய்?

கற்றல் தரம் 5.2.8 • தன்மை, முன்னிலை, படர்க்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


ஆசிரியர் குறிப்பு • தன்மை, முன்னிலை சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கச் செய்தல்.

தொகுதி 7

# விவசாயம்

## பாடம் 1 சந்தை

கலந்துரையாடுக.






கந்தன் ஒரு **கொத்துத்** திராட்சை வாங்கினான்.

ஒரு **கட்டு** ரம்புத்தானின் விலை RM5.00.





அம்மா ஒரு **சீப்பு** வாழைப்பழம் எனக்குக் கொடுத்தார்.

கற்றல் தரம் 1.3.11
- சீப்பு, கொத்து, கட்டு, குவியல் ஆகிய தொகுதிப் பெயர்களைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- தொகுதிப் பெயர்களைப் பயன்படுத்திச் சூழலை நடித்துக் காட்டச் செய்தல்.

## பாடம் 2 உள்நாட்டுப் பழங்கள்

வாசித்திடுக.




| கற்றல் தரம் 2.3.8 | ▪ விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • விளம்பரத்தை வாசித்து அறிவிப்பாகக் கூறச் செய்தல். |

## பாடம் 3 பயணம் இனிது



**கோவையாக எழுதிடுக.**

### கமலாவின் பயணம்

ஒரு நாள் கமலா மாமாவின் [ரப்பர்த் / செம்பனைத்] தோட்டத்திற்குச் சென்றாள். அவள் மகிழ்ச்சியுடன் [மகிழுந்தில் / பேருந்தில்] பயணித்தாள்.

[அம்மா / பாட்டி] சுவையான [சிற்றுண்டித் / மதிய உணவு] தயாரித்து எடுத்து வந்தார்.

[இரண்டு / மூன்று] மணி நேரத்திற்குப்பின் அங்குச் சென்று அடைந்தனர்.

மாமா [ரப்பர் / செம்பனை] மரம் தொடர்பான விளக்கம் அளித்தார்.

இந்தப் பயணம் அவளுக்கு [மகிழ்ச்சியாக / சிறப்பாக] அமைந்தது.

ஒரு நாள் கமலா மாமாவின் ரப்பர்த் தோட்டத்திற்குச் சென்றாள். அவள் மகிழ்ச்சியுடன் மகிழுந்தில் பயணித்தாள். அம்மா சுவையான சிற்றுண்டித் தயாரித்து எடுத்து வந்தார். இரண்டு மணி நேரத்திற்குப்பின் அங்குச் சென்று அடைந்தனர். மாமா ரப்பர் மரம் தொடர்பான விளக்கம் அளித்தார். இந்தப் பயணம் அவளுக்கு மகிழ்ச்சியாக அமைந்தது.

**நடவடிக்கை** **செம்பனைத் தோட்டப் பயணம் பற்றிய கருத்துகளைக் கோவையாக எழுதிடுக.**

கற்றல் தரம் 3.4.5 ▪ தலைப்பையொட்டிய கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • செம்பனைத் தோட்டப் பயணம் பற்றியக் கருத்துகளைக் கோவையாக எழுத வழிகாட்டுதல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

**திருக்குறள் :** **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. (391)**

**பொருள் :** கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றபிறகு கற்ற கல்விக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டும்.



**நடவடிக்கை 1** **திருக்குறளின் முதல் அடியை எழுதிடுக.**

____________________________

நிற்க அதற்குத் தக.

**நடவடிக்கை 2** **திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறி எழுதிடுக.**

கற்றல் தரம் 4.5.2 • நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு • திருக்குறளைப் பாடலாகப் பாடச் செய்தல்.

## பாடம் 1 விளையாட்டு

**கேள்விகளுக்கேற்பப் பதில் கூறிடுக.**

**எத்தனை**

**எவ்வளவு**






ஓர் அணியில் **எத்தனை** விளையாட்டாளர்கள் விளையாடுவர்?

**11 விளையாட்டாளர்கள் விளையாடுவர்.**



**எவ்வளவு** நேரம் ஓய்வு வழங்கப்படும்?

**15 நிமிடங்கள் ஓய்வு வழங்கப்படும்.**

| | |
|---|---|
| கற்றல் தரம் 1.4.5 | ▪ எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகள் கேட்டுப் பதில் கூறச் செய்தல். |

**நடவடிக்கை** **கேள்விகளுக்கேற்பப் பதில் கூறிடுக.**




1. திடலின் நீளம் **எத்தனை** மீட்டர்?

2. ஓர் அணியில் **எத்தனை** விளையாட்டாளர்கள் விளையாடுவர்?

3. விளையாட்டு நேரம் **எவ்வளவு**?

4. திடலின் அகலம் **எவ்வளவு**?

கற்றல் தரம் 1.4.5

- எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு

- விளையாட்டுத் தொடர்பான எத்தனை, எவ்வளவு எனும் கூடுதல் கேள்விகள் கேட்டுப் பதில் கூறச் செய்தல்.

# பாடம் 2 சீனப் பெருஞ்சுவர்

**வாசித்திடுக.**



ச. குமணன்,
எண் 15, ஜாலான் பாரி 3,
தாமான் அங்சானா பாரி,
34200 பாரிட் புந்தார்.

4 ஜூலை 20xx

அன்புத் தோழன் அரசுவிற்கு,

இங்கு நான் நலம். அங்கு நீ நலமா?

நண்பா, கடந்த விடுமுறையில் சீனாவிற்குச் சுற்றுலா சென்றேன். அங்கு ஏழு அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரைக் கண்டு மகிழ்ந்தேன். இச்சுவரின் நீளம் சுமார் 21,196 கிலோ மீட்டர் ஆகும்.

இது முதல் சீனச் சக்கரவர்த்தியான கின் ஷி ஹாவாங் என்பவரால் தொடங்கப்பட்டது. இச்சுவரின் ஒரு பகுதி சுற்றுலாத் தளமாகத் திகழ்கிறது.

அரசு, வாய்ப்புக் கிடைத்தால் நீயும் அவ்விடத்திற்குச் சென்று வா. இத்துடன் எனது கடிதத்தினை முடித்துக் கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
அன்புத் தோழன்,
*ச. குமணன்*

கற்றல் தரம் 2.3.9
- கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- மின்னஞ்சல் கடிதம் ஒன்றனை வாசிக்கச் செய்தல்.

**கோவையாக எழுதிடுக.**

1. கடந்த வாரம் அப்பா என்னை மீன் பிடிக்க அழைத்துச் சென்றார்.
2. தேவையான பொருள்களைத் தயார் செய்தோம்.
3. ஆர்வத்துடன் படகில் ஏறினோம்.
4. மீன் பிடிக்கும் - வழிமுறைகள்.
5. தூண்டில் - காத்திருந்தேன்.
6. மீன் சிக்கியது - மகிழ்ச்சி.

கடந்த வாரம் அப்பா என்னை மீன் பிடிக்க அழைத்துச் சென்றார். முதலில் தேவையான பொருள்களைத் தயார் செய்தோம். பிறகு ஆர்வத்துடன் படகில் ஏறினோம். அப்பா மீன் பிடிக்கும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தார். ____________________

________________________________________



கற்றல் தரம் 3.4.7
- அனுபவத்தை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு
- வாக்கியங்களைக் கோவையாக நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

மாணவர்களே,
வலிமிகா இடங்கள் அறிவோம், வாரீர்.

- சொற்றொடர்களில், வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினாலும் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.
- சில, பல என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது.



| | | | | |
|---|---|---|---|---|
| சில | + | கிண்ணங்கள் | = | சில கிண்ணங்கள் |
| பல | + | கொடிகள் | = | பல கொடிகள் |
| சில | + | செடிகள் | = | சில செடிகள் |
| பல | + | பூக்கள் | = | பல பூக்கள் |

1. தோட்டத்தில் **பல பூக்கள்** பூத்துக் குலுங்கின.
2. அலமாரியில் **சில கிண்ணங்கள்** அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

கற்றல் தரம் 5.5.1
- சில, பல என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- சில, பல சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்கப் பணித்தல்.

## நடவடிக்கை 1 சேர்த்து எழுதிடுக.


1. சில + பேழைகள் = ______
2. பல + குதிரைகள் = ______
3. சில + சேவல்கள் = ______
4. பல + தந்தங்கள் = ______
5. பல + புட்டிகள் = ______
6. சில + சீப்புகள் = ______
7. பல + காதணிகள் = ______
8. சில + தொட்டில்கள் = ______

## நடவடிக்கை 2 திருத்தி எழுதிடுக.

குளத்தில் பல தவளைகள் நீந்திக் கொண்டிருந்தன. அப்பொழுது, அங்கு வந்த சிலப் பாம்புகள் தவளைகளைத் துரத்தின. அச்சமயம் பலக் கீரிகள் அங்கே வந்தன. இதனைக் கண்ட பல பாம்புகள் புற்றில் மறைந்தன.

______

______






கற்றல் தரம் 5.5.1
• சில, பல என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
• சில, பல சொற்றொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

# தொகுதி 9 கல்வி

## பாடம் 1 நூலகம்

**விவரங்களைக் கூறிடுக.**




**விவரங்கள்**

- பள்ளி
- வகை
- அதிகம்
- குறைவு
- மொத்தம்

குறிவரைவு, லாருட் தேசியப்பள்ளி நூலகத்தில் காணப்படும் நூல்களின் வகைகளைக் குறிக்கிறது.

கற்றல் தரம் 1.5.3
- குறிவரைவில் உள்ள விவரங்களைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு
- குறிவரைவுகளைத் திரட்டி அதிலுள்ள விவரங்களைப் பேசச் செய்தல்.

வாசித்திடுக.

## முக்கியச் செய்திகள்

நேரலை

காலை மணி 7:30



**பள்ளிகளில் சுற்றுச்சூழல் பாடம் அறிமுகம்.**

வணக்கம்.

மணிச் செய்திகளுடன் நான் சாமந்தி நடராஜன்.

பள்ளிகளில் சுற்றுச்சூழல் பாடத்தை அறிமுகம் செய்ய கல்வி அமைச்சர் பரிந்துரை செய்துள்ளார்.

மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக இது அமையும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், இதன் தொடர்பான கல்வித் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்று செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.




கற்றல் தரம் 2.3.10 • செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • செய்தி வாசிப்பாளர் போன்று வாசிக்கச் செய்தல்.

## பாடம் 3 எதிர்கால ஆசை

**கோவையாக எழுதிடுக.**

மீரி தேசியப்பள்ளி
நான்காம் ஆண்டு மாணவர்களின் எதிர்கால ஆசை




குறிவரைவு 1

இக்குறிவரைவு, மீரி தேசியப்பள்ளியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்களின் எதிர்கால ஆசையைக் குறிக்கிறது. மாணவர்கள் மூன்று துறைகளைத் தேர்வாகக் கொண்டுள்ளனர். அதிகமான மாணவர்கள் அறிவியலாளராக விரும்புகின்றனர். ____________________

____________________________________________

**நடவடிக்கை** **விவரங்களைக் கோவையாக எழுதிடுக.**

தாமான் ரூசா தேசியப்பள்ளி
நான்காம் ஆண்டு மாணவர்களின் பொழுதுபோக்கு




குறிவரைவு 2

கற்றல் தரம் 3.4.3
- குறிவரைவிலுள்ள விவரங்களைக் கோவையாக எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு
- குறிவரைவிலுள்ள விவரங்களைக் கோவையாக எழுதப் பணித்தல்.

பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

அனைத்துலக ரீதியிலான இசை நடனப் போட்டியில் மெடினா தங்கம் வென்றாள். தன் வெற்றியை எண்ணி உச்சி குளிர்ந்தாள்.





போட்டியில் கலந்து கொள்வதற்கு முன்பு மெடினா பெற்றோரிடம் ஆசி பெற்றாள். இப்பழக்கம் தொன்று தொட்டு அவர்கள் பின்பற்றும் வழக்கமாகும்.

| | | |
|---|---|---|
| **மரபுத்தொடர்** | **உச்சி குளிர்தல்** | **தொன்று தொட்டு** |
| **பொருள்** | பெரும் மனமகிழ்ச்சி அடைதல் | நெடுங்காலமாய் / ஆதிகாலத்திலிருந்து |

**நடவடிக்கை** **நிறைவு செய்திடுக.**

1. வியாபாரத் துறையில் தன் மகனின் துரித வளர்ச்சியைக் கண்டு திரு. அஸிஸ் ________.
2. தமிழர்களின் திருமணத்தின்போது வாழைமரம் கட்டுவது ________ பின்பற்றும் வழக்கமாகும்.
3. வேந்தன் பேச்சுப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றதால் ________.

கற்றல் தரம் 4.6.2 ▪ நான்காம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு • மரபுத்தொடருக்கு ஏற்ற சுவரொட்டி செய்யப் பணித்தல்.

# தொகுதி 10 நிகழ்ச்சிகள்

## பாடம் 1 சுற்றுலாச் சந்தை

**விவரங்களைக் கூறிடுக.**

வணக்கம். சுற்றுலாப் பிரியர்களின் கவனத்திற்கு, குறைந்த விலையில் பாலித் தீவிற்குச் செல்ல வேண்டுமா? இதோ, உங்களுக்காகக் கவிப்பிரியா பயண நிறுவனத்தின் சில தகவல்கள்.

- 4 நாள் 3 இரவு
- நான்கு நட்சத்திரத் தங்கும் விடுதி
- போக்குவரத்து, பயணச்சீட்டு, நுழைவுக் கட்டணம் உட்பட RM500.00 மட்டுமே.

- குறைந்த விலையில் நிறைந்த சேவை.
- உடனே 10ஆம் எண் கொண்ட கூடாரத்தை நாடுங்கள். நன்றி.




கற்றல் தரம் 1.5.4 ▪ அறிவிப்பில் உள்ள விவரங்களைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • வானொலி அறிவிப்பில் உள்ள விவரங்களைக் கூறச் செய்தல்.



# பாடம் 2 விண்வெளிக் கண்காட்சி

**வாசித்துப் பதிலளித்திடுக.**







## செத்தியா தேசியப்பள்ளி
## 09000 கூலிம், கெடா

பெற்றோர்களின் கவனத்திற்கு, 5 ஜூலை 20xx

**விண்வெளிக் கண்காட்சி**

வணக்கம். சுடர் **இயக்கத்தினர்** விண்வெளிக் கண்காட்சியினை நடத்த உள்ளனர். இதன் விவரங்கள் பின்வருமாறு:

நாள் : 16 ஜூலை 20xx
இடம் : பள்ளி மண்டபம்
நேரம் : காலை மணி 8:00 – மாலை மணி 5:00 வரை
நுழைவு : இலவசம்

நிகழ்ச்சி நிரல்:

- **சூரியக்** குடும்பம் கண்காட்சி
- மாதிரி ஏவூர்தி (ராக்கெட்)
- முப்பரிமாண விண்வெளிப் **பயணம்**
- விண்வெளி வீரர் சீருடைக் கண்காட்சி
- விண்வெளி வீரர் வருகை

எனவே, இக்கண்காட்சிக்கு உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

நன்றி.

இக்கண்,
தலைமையாசிரியர்





1. இந்த அறிவிப்பு எதன் தொடர்பானது?

   அ. விண்வெளிக் கண்காட்சி

   ஆ. விண்வெளி வீரர் கண்காட்சி

2. இக்கண்காட்சி யாரால் ஏற்பாடு செய்யப்படுகிறது?

   அ. விண்வெளி இயக்கம் ஆ. சுடர் இயக்கம்

3. விண்வெளிக் கண்காட்சி எப்பொழுது நடைபெறும்?

   அ. 5 ஜூலை ஆ. 16 ஜூலை

4. இக்கண்காட்சியில் நடைபெறும் அங்கங்கள் யாவை?

5. இக்கண்காட்சியில் கலந்து கொள்வதனால் நீ அடையும் பயன் என்ன?

6. பொருள் காண்க:

   அ. இயக்கம் ______ ஆ. சூரியன் ______ இ. பயணம் ______

கற்றல் தரம் 2.4.4 ▪ அறிவிப்புத் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்க வழி காட்டுதல்.

## பாடம் 3 பரிசு யாருக்கு

**கோவையாக எழுதிடுக.**

டும்! டும்! டும்!

ஒரு முக்கிய அறிவிப்பு!

உங்களுக்குச் சிறப்புப் பரிசுக் காத்திருக்கிறது.

தாத்தா சிங்கத்தைச் சிரிக்க வையுங்கள்; பரிசைத் தட்டிச் செல்லுங்கள்!

நேரம் : காலை மணி 10:00

இடம் : மூங்கில் காடு

உடனே, கரடியாரிடம் பதிவு செய்யுங்கள்.

நன்றி.

டும்! டும்! டும்!

தாத்தா சிங்கத்தைச் சிரிக்க வைக்கும் போட்டி நடைபெறும். காலை மணி 10:00க்கு இப்போட்டி ஆரம்பம் ஆகும். இத்தேர்வு மூங்கில் காட்டில் நடைபெறும். ______________________________

______________________________________________

காத்திருக்கிறது சிறப்புப் பரிசு. வெற்றி யாருக்கு என்பதை முடிவு செய்யுங்கள்.



கற்றல் தரம் 3.4.4
- அறிவிப்பிலுள்ள விவரங்களைக் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- அறிவிப்பைப் பாகமேற்று நடித்து விவரங்களைக் கோவையாக எழுதப் பணித்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**



அகிலேஷ் பனிச்சறுக்கு விளையாட்டுப் போட்டியில் பங்கெடுக்க முடிவு செய்தான். இப்போட்டியில் பங்கெடுக்க அவனுக்குப் போதிய வசதியில்லை. **அழுத பிள்ளை பால் குடிக்கும்** என்பதற்கொப்ப தானே முயற்சி செய்தான்.

தலைமையாசிரியரின் உதவியை நாடினான். அவரும் உதவினார். போட்டியில் கலந்து வெற்றி பெற்றான்.








| | |
|---|---|
| **பழமொழி** | **அழுத பிள்ளை பால் குடிக்கும்.** |
| **பொருள்** | ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ள தாமே முயற்சி செய்ய வேண்டும். |

கற்றல் தரம் 4.7.2 ▪ நான்காம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • கதையை நயத்துடன் கூறப் பணித்தல்.

## நடவடிக்கை 1

**பழமொழியையும் அதன் பொருளையும் முறைப்படுத்தி எழுதிக் கூறிடுக.**




**பழமொழி**

**பொருள்**

## நடவடிக்கை 2

**வரிவடிவமாக எழுதிடுக.**

அழுத பிள்ளை பால் குடிக்கும்

## நடவடிக்கை 3

**பழமொழியையும் பொருளையும் கைப்பாவை பயன்படுத்தி நடிக்கச் செய்தல்.**

கற்றல் தரம் 4.7.2

- நான்காம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- பழமொழியையும் பொருளையும் எழுதி பார்வைக்கு வைக்கச் செய்தல்.

# தொகுதி 11 மனம் கவர்ந்தவை

## பாடம் 1 கேட்டதில் ரசித்தது

**செவிமடுத்துக் கூறிடுக.**



நண்பர்கள் ஐவர் விமானத்தில் பயணம் செய்தனர். திடீரென்று விமானம் தீப்பற்றியது. தப்பிக்க நான்கு வான்குடைகள் மட்டுமே இருந்தன. அப்போது...

சிங்கம் : அடுத்த தலைவன் நான், குதிக்கட்டுமா?

குதிரை : எனக்குப் பந்தயம் இருக்கிறதே! நான்...?

கழுதை : பிறரைப் பற்றிக் கவலையில்லை. நான் முந்திக் கொள்கிறேன்.

புலி : நான் வாழ்ந்து முடித்தவன். நீங்கள் குதியுங்கள்!

மான் : ஹா! ஹா! ஹா! கழுதை எடுத்துக் குதித்தது என்னுடைய துணிப்பை. இனி நாம் அனைவரும் தப்பிக்கலாம்.

சிங்கம் : எண்ணம் போல வாழ்வு.

கற்றல் தரம் 1.2.9 ▪ செவிமடுத்த கதையைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • செவிமடுத்த கதையைச் சொந்த நடையில் கூறச் செய்தல்.



# பாடம் 2 புதிய தேடல்

## வாசித்து அறிந்திடுக.

**க**

**கலணை:** (குதிரை) சேணம்.
**கலதி:** கேடு; அழிவு; தீக்குண முண்டயவன்; மூதேவி; தலை வழுக்கை விழும் நோய்.
**கலப்பு:** கலத்தல்; தோழமை கொள்ளல்; கூடுதல்; புணர்ச்சி.
**கலப்பெண்:** (கணிதம்) பின்னத் துடன் சேரும் முழு எண்.


கலப்பை

**கலப்பை:** உழுபடை; ஏர்; உறுப்பு; இசைக் கருவி முதலியன வைக்கும் பை.
**கலம்:** பாத்திரம்; கப்பல்; ஓடம்; அணிகலன்; ஏர்; யாழ்; ஆயுதம்; ஓலைப் பத்திரம்; ஓர் முகத்தலளவு.
**கலம்பகம்:** கலவை; பலவகைச் செய்யுட்களாலாகிய ஒரு

**கலம்:** பாத்திரம்; கப்பல்; ஓடம்; அணிகலன்; ஏர்; யாழ்; ஆயுதம்; ஓலைப் பத்திரம்; ஓர் முகத்தலளவு.

**ச**

**சோதி:** ஒளி; கிரணம்; தீ; தீபம்; சூரியன்; நட்சத்திரம்; கடவுள்; சாதிலிங்கம்; ஞானம்.
**சோதிடம்:** வான சாத்திரம்; கிரக நிலைகளின் பலன்களைக் கூறும் சாஸ்திரம்; நமித்த சாஸ்திரம். [சோதிடர், சோதிடவர்]
**சோப்பு:** அடி; சவர்க்காரம்.
**சோமம்:** யாகங்களில் பயன்பட்ட ஒரு வகைக் செடி; சோம யாகம்; கள்.
**சோமன்:** சந்திரன்; குபேரன்; கர்ப்பூரம்; ஆணின் ஆடை.
**சோமாறி:** சோம்பேறி; ஏனாதியர் சாதி வகை.
**சோர்:** தளர்வுறு; மூர்ச்சையுறு; நழுவு; கீழே விழு; கசிதல் செய்; மெலிவுறு; தடுமாறு; இற; விட்டொழி. [சோர்தல்]
**சோர்பதன்:** தளர்வுற்ற காலம்.
**சோர்வு:** தளர்ச்சி; மறதி; மெலிவு; இழுக்கு; சொரிதல்;

**சோதி:** ஒளி; கிரணம்; தீ; தீபம்; சூரியன்; நட்சத்திரம்; கடவுள்; சாதிலிங்கம்; ஞானம்.

**ப**

**பூஸ்திதி:** நிலச் சொத்து.
**பெட்டகம்:** பெட்டி.
**பெட்டி:** பண்டங்களை வைக்க உதவும் மூடியுள்ள கலம்; கூடை; ஒருவகை நெல்.
**பெட்டை:** விலங்குகள்; பறவைகள் ஆகியவற்றின் பெண்பால்; பெண்; குருடு; குறைபாடு.
**பெட்ப:** மிக.
**பெட்பு:** விருப்பம்; அன்பு; பெருமை; தன்மை.
**பெடை:** பறவைகளின் பெண் பால்.
**பெண்:** மாது; மகள்; சிறுமி; மனைவி.
**பெண்டாட்டி:** பெண்; மனைவி; வேலைக்காரி.
**பெண்டு:** பெண்; மனைவி.
**பெண்ணை:** பனை; பெண்மரம்; வட பெண்ணை, தென் பெண்ணை ஆறுகள்.
**பெண்பால்:** மாதர் இனம்;

**பெண்:** மாது; மகள்; சிறுமி; மனைவி.

**ந**

செய்; அவமதித்தல் செய்; தோல்வியுறச் செய். [நகுதல்]
**நகுலம்:** கீரி.
**நகுலன்:** குதிரையேற்றத்தில் திறமையுள்ளவன்.
**நகை:** சிரிப்பு; மகிழ்ச்சி; பரிகாசம்; நட்பு; விளையாட்டு, பூ; பூவின் மலர்ச்சி; ஒளி; பல்; முத்து; முத்து மாலை; ஒப்பு.
**நகை:** சிரித்தல் செய். [நகைத்தல், நகைப்பு]
**நங்கூரம்:** கப்பலை ஓரிடத்தில் நிறுத்தப் பயன்படும் பளுவான இரும்பு.
**நங்கை:** பெண்ணில் சிறந்தவள்.
**நச்சு:** விரும்பு; தொந்தரை செய். [நச்சுதல்]
**நச்சு:** ஆசை; விரும்பப்படும் பொருள்; தொந்தரை.
**நசி:** அழிந்து போ; நசுங்கு; சுருங்கு; அழித்தல் செய்;

**நகை:** சிரிப்பு; மகிழ்ச்சி; பரிகாசம்; நட்பு; விளையாட்டு, பூ; பூவின் மலர்ச்சி; ஒளி; பல்; முத்து; முத்து மாலை; ஒப்பு.



## நடவடிக்கை பொருள் எழுதி வாசித்திடுக.

1. அச்சம் ▶ பயம்
2. உடை ▶ ________
3. பசு ▶ ________
4. நிலா ▶ ________
5. தீ ▶ ________
6. சேய் ▶ ________




கற்றல் தரம் 2.5.1
▪ அகராதியின் துணை கொண்டு சொல்லின் பொருளை அறிவர்.

ஆசிரியர் குறிப்பு
• அகராதியைப் பயன்படுத்திப் பொருள் அறியத் துணை புரிதல்.

## பாடம் 3 என் தேவதை

**கோவையாக எழுதிடுக.**




என் மனத்தின் தேவதை அம்மா. ______________________

____________________________________________

____________________________________________


என் அம்மாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

கற்றல் தரம் 3.4.5
- தலைப்பையொட்டிய கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- என் ஆசிரியர் எனும் தலைப்பையொட்டிய கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதப் பணித்தல்.

பாடம் 4

# இலக்கணம்



**கலந்துரையாடுக.**

அது, இது, எது என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது.
அறிவீர்களா?

| | | | | |
|---|---|---|---|---|
| அது | + | காடு | = | அது காடு |
| இது | + | படகு | = | இது படகு |
| எது | + | தவறு | = | எது தவறு? |

## நடவடிக்கை 1 **சேர்த்து எழுதிடுக.**

1. அது + கொலுசு = **அது கொலுசு**
2. இது + தகரம் = ______
3. எது + பாலம் = ______
4. அது + கயிறு = ______
5. இது + வயல் = ______
6. எது + சங்கு = ______

## நடவடிக்கை 2 **தெரிவு செய்திடுக.**

1. அதில் (எதுச் சிறந்த / **எது சிறந்த**) ஓவியம்?
2. (இது தங்கத்தால் / இதுத் தங்கத்தால்) செய்யப்பட்ட சிலை.
3. (அது காட்டில் / அதுக் காட்டில்) வாழும் விலங்கு.
4. (எதுப் பாரமான / எது பாரமான) பெட்டி?

கற்றல் தரம் 5.5.2
• அது, இது, எது என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
• அது, இது, எது எனும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

தொகுதி 12


# தகவல் யுகம்

## பாடம் 1 உலகச் செய்திகள்

**செவிமடுத்துக் கூறிடுக.**

தலைப்புச் செய்திகள் வாசிப்பவர் யாழினி.

- வேற்றுக்கிரக வாசிகள் வருகை; விஞ்ஞானிகளின் அதிர்ச்சித் தகவல்.
- சந்திரனில் குடியிருப்பு அமைக்க நாசா திட்டம்.
- சூரியனின் இரட்டைக் கிரகம் கண்டுபிடிப்பு; விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் வியப்பு.
- பூப்பந்துப் போட்டியில் இந்திய வீராங்கனை வெற்றி; சீனாவில் சாதனை.




கற்றல் தரம் 1.2.10
- செவிமடுத்த செய்தியைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு
- செய்தி வாசிப்பைப் போலித்தம் செய்யப் பணித்தல்.

## பாடம் 2 வானிலைச் செய்திகள்

**வாசித்திடுக.**






கற்றல் தரம் 2.3.10
- செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- நாளிதழ் செய்திகளைப் பாகமேற்றுச் செய்தியாக வாசிக்கச் செய்தல்.


## பாடம் 3 தகவல் அறிக


**கோவையாக எழுதிடுக.**



நான் தம்பியுடன் சலவை நிலையத்திற்குத் துணி துவைக்கச் சென்றேன்.






| | | |
|---|---|---|
| காசு வில்லைகளை மாற்றினேன். | காசு வில்லைகளை உள்ளே போட்டேன். | தொடங்குக என்ற விசையைத் தட்டினேன். |

நான் தம்பியுடன் சலவை நிலையத்திற்குத் துணி துவைக்கச் சென்றேன்.

________________________________________

________________________________________

அடுத்துத் துணிகளைச் சலவை இயந்திரத்தின் உள்ளே போட்டு மூடினேன்.

கற்றல் தரம் 3.4.7 ▪ அனுபவத்தை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • பேரங்காடிக்குச் சென்ற அனுபவத்தைக் கோவையாக எழுதச் செய்தல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**



ராமதியும் கௌசலும் நகமும் சதையும் போல நெருங்கிப் பழகும் நண்பர்கள். சதுரங்கப் போட்டியில் அவர்கள் வெற்றி பெற்ற செய்தி காட்டுத் தீ போல பரவியது.

**உவமைத்தொடர்**

| | |
|---|---|
| **நகமும் சதையும் போல** | மிக நெருக்கமாக |
| **காட்டுத் தீ போல** | ஒரு செய்தி விரைவாகப் பரவுதல் |

**நடவடிக்கை 1** **நிறைவு செய்திடுக.**

1. கிராமத் தலைவருக்கு விருது வழங்கப்பட்ட செய்தி ______ பரவியது.
2. ______ இருந்த அருணுக்கும் வர்மனுக்கும் ஒரே பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்தது.
3. பறக்கும் மகிழுந்து பற்றிய செய்தி ______ பரவியது.
4. ______ பழகிய நண்பர்கள் இருவரும் சண்டையிட்டுப் பிரிந்தனர்.

**நடவடிக்கை 2** **உவமைத்தொடரையும் பொருளையும் அறிந்து கூறி எழுதிடுக.**

கற்றல் தரம் 4.8.1
- நான்காம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- உவமைத்தொடருக்குப் பொருத்தமான சூழலை உருவாக்கி நடிக்கச் செய்தல்.

# தொகுதி 13 பண்பாடு

## பாடம் 1 இசை அமுது


**கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறிடுக.**




வணக்கம் நண்பர்களே, தற்போது நவீன இசைக் கருவிகள் அதிகம்தான். இருப்பினும், உங்கள் இசைக்கு மயங்காதோர் உண்டோ?



ஆமாம், நண்பா! சுப காரியங்களுக்கும் ஆலய விழாக்களுக்கும் எங்களை நாடுகின்றனர்.



என்னைத் தெரிகிறதா நண்பரே? நான் தவிலின் தோழன் நாதஸ்வரம். துளைக்கருவி வகையைச் சார்ந்தவன். என்னுள் மொத்தம் 12 துளைகள் உள்ளன.



நன்று நண்பா! நானோ தோல்கருவி. என்னைக் குச்சியைக் கொண்டும் கவசம் அணிந்த விரல்களைக் கொண்டும் முழக்குவர்.




ஆஹா! அருமை! நம்மால் இசை வளர்கிறது; பண்பாடு உயர்கிறது.

கற்றல் தரம் 1.2.11 ▪ செவிமடுத்த உரையாடலில் உள்ள கருத்துகளைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • உரையாடலை நடித்துக் காட்டச் செய்தல்.

## பாடம் 2 மலரும் மொட்டு

**வாசித்திடுக.**






கற்றல் தரம் 2.3.5


- உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு

- உரையாடலை வாசித்து நடிக்கச் செய்தல்.

## பாடம் 3 இன்னிசை விழா

கருத்துகளைக் கோவையாக எழுதிடுக.




கடந்த சனிக்கிழமை நான் இன்னிசை விழாவில் கலந்து கொண்டேன்.

**சூழல்:**

கடந்த சனிக்கிழமை, ரவி தன் குடும்பத்தோடு இன்னிசை விழாவிற்குச் சென்றான். அங்கே...





கடந்த சனிக்கிழமை, நான் குடும்பத்தோடு இன்னிசை விழாவில் கலந்து கொண்டேன். ____________________


____________________________________________

நாங்கள் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினோம்.

# பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**





**நான்காம் வேற்றுமை உருபு அறிவோம்**

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| நான்காம் வேற்றுமை | கு | **முகிலனுக்குப்** பதவி உயர்வு கிடைத்தது. |

## நடவடிக்கை 1 சேர்த்து எழுதிடுக.

1. கடை + கு = **கடைக்கு**
2. தம்பி + கு = ______
3. மகேன் + கு = ______
4. வடை + கு = ______
5. பறவை + கு = ______

## நடவடிக்கை 2 வேற்றுமை உருபை இணைத்து எழுதிடுக.

1. குகன் **பள்ளி** நடந்து சென்றான்.

   குகன் **பள்ளிக்கு** நடந்து சென்றான்.

2. **குருவி** இரை கிடைத்தது.
3. வெண்ணிலா **சந்தை** வந்தாள்.
4. **ராணி** நிறைய பணம் கிடைத்தது.
5. குழந்தை **பொம்மை** அழுதது.



கற்றல் தரம் 5.2.7 ▪ மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு • நான்காம் வேற்றுமை உருபு ஏற்றுள்ள சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கச் செய்தல்.

தொகுதி 14

# விழிப்புணர்வு

## பாடம் 1 இன்றைய அறிவிப்பு

**செவிமடுத்துக் கூறிடுக.**


### அறிவிப்புக் கேளீர்!

வணக்கம்.
இது ஒரு பயன்மிகு அறிவிப்பு.
எங்களைத் தினமும் பயன்படுத்தத் துடிக்கிறீர்களே!
எங்களின் அதிகப் பயன்பாடு உங்களுக்குப் பெரும்பாடு. அறிவீர்களா?

தூக்கம் தொலையும்; பசி மறையும்.

நேரம் தவறும்; பார்வை குறையும்;
இது தேவையா?

உங்கள் சேவைக்கு நாங்கள்;
தேவைக்கு மட்டுமே நாடுங்கள்.



கற்றல் தரம் 1.2.8 ▪ செவிமடுத்த அறிவிப்பைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • அறிவிப்பைப் பல்வேறு தொனியில் கூறச் செய்தல்.

## நடவடிக்கை செவிமடுத்துக் கூறிடுக.




**அறிவிப்பு 1**

### வாழ விடுங்கள்


நீங்கள் வெளியிடும் கரிவளியை நாங்கள் உயிர்வளியாக மாற்றிக் கொடுக்கிறோம். எங்களை நடுங்கள், பலனைப் பெறுங்கள்.


**அறிவிப்பு 2**

### இன்றே செய்வோம்

இனிப்பைச் சுவைபானங்களில் குறைத்துக் கொள்ளுங்கள்; உங்கள் சிரிப்பில் அதனை இணைத்துக் கொள்ளுங்கள்.



**அறிவிப்பு 3**

### நண்பனாக வருகிறேன்

குறளை நேசி. வானம் அளவு யோசி. என்னைக் கையில் எடுத்து வாசி.



கற்றல் தரம் 1.2.8 ▪ செவிமடுத்த அறிவிப்பைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • வானொலி அறிவிப்பைச் செவிமடுத்துக் கூறச் செய்தல்.

பாடம் 2 **நல்வாழ்வு**


**வாசித்து விடை காண்க.**

## நல்வாழ்வுக் கையேடு
## படிப்போம்; பகிர்வோம்

இளையோருக்கு ஓர் அறிவிப்பு

உங்களுக்குப் புகை பகையா?

இதோ உங்களுக்கான அரிய **பரிசு.**



**1 வது பரிசு**

இருதய நோய் தடுப்பு



**2 வது பரிசு**

உடல் வனப்பு



**3 வது பரிசு**

நீண்ட ஆயுள்



**4 வது பரிசு**

நல்ல நண்பர்கள்



**5 வது பரிசு**

குடும்ப நலன்

**உங்கள் உடல் நலம் உங்கள் பொறுப்பு.**



**புகையைத் தவிர்ப்போம்; புன்னகையைப் பெறுவோம்.**

கற்றல் தரம் 2.4.4 ▪ அறிவிப்புத் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • அறிவிப்பாக வாசிக்க வழிகாட்டுதல்.

1. இந்த அறிவிப்பு எதைப் பற்றியது?

| | |
|---|---|
| உணவு | |
| நல்வாழ்வு | ✓ |



2. எத்தனை பரிசுகள் கிடைக்கும்?

| | |
|---|---|
| நான்கு | |
| ஐந்து | |

3. அறிவிப்பின் நோக்கம் என்ன?

| | |
|---|---|
| புகைப் பிடிப்பதைத் தவிர்க்க | |
| புகைப் பிடிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்த | |

4. ஐந்தாவது பரிசாகக் குறிப்பிடப்படுவது எது?

| | |
|---|---|
| குடும்ப நலன் பெருகும். | |
| உடல் வனப்பு அதிகரிக்கும். | |

5. சரியான பொருளுக்கு அடையாளமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| **வனப்பு** | அழகு | | தளர்ச்சி | |
| **நண்பர்கள்** | சகோதரர்கள் | | தோழர்கள் | |
| **பரிசு** | பெட்டி | | வெகுமதி | |

6. 'புகையைத் தவிர்ப்போம்; புன்னகையைப் பெறுவோம்' எனும் கூற்று உணர்த்தும் கருத்து யாது?





கற்றல் தரம் 2.4.4 ▪ அறிவிப்புத் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • அறிவிப்பை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கச் செய்தல்.

## பாடம் 3 கதைப் பெட்டி

**கோவையாக எழுதிடுக.**

**சுட்டிகளே,**

**குட்டிக் கதை எழுத ஆசையா?**
**இதோ, பூமலர் இதழின் கதைப் பெட்டி.**
**கதைகளை எழுதிப் பெட்டிக்குள் போடுங்கள்.**

- படைப்புகள் தமிழில் இருக்க வேண்டும்.
- எழுத்து வடிவில் அனுப்ப வேண்டும்.
- உங்கள் கதைகள் வண்ணப் படங்களுடன் வெளியிடப்படும்.
- இறுதி நாள் : 31 ஆகஸ்ட் 20XX
- தொடர்புக்கு : திரு. செழியன் 0123456789

**சவாலை ஏற்போம்! சாதனை படைப்போம்!**



பூமலர் இதழின் கதைப்பெட்டி சுட்டிகளின் கதைகளைச் சேகரிக்கின்றது. கதைகளை எழுதிப் பெட்டிக்குள் போட வேண்டும். படைப்புகள் __________. கதைகளை __________ அனுப்ப வேண்டும். சுட்டிகளின் இந்தக் கதைகள் ______________ வெளியிடப்படும். ____________________________________________

____________________________________________

கற்றல் தரம் 3.4.4
- அறிவிப்பிலுள்ள விவரங்களைக் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- நாளிதழில் உள்ள அறிவிப்பைப் பார்த்து எழுதச் செய்தல்.


## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**





| | |
|---|---|
| **உலகநீதி** | **ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்** |
| **பொருள்** | படிக்காமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது. |

**நடவடிக்கை 1** **உலகநீதியின் பொருளை உணர்த்தும் படத்திற்கு ( ✓ ) என அடையாளமிடுக.**






**நடவடிக்கை 2** **உலகநீதியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறி எழுதிடுக.**

| | |
|---|---|
| கற்றல் தரம் 4.9.1 | ▪ நான்காம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| ஆசிரியர் குறிப்பு | ▪ உலகநீதியையும் பொருளையும் பாடலாகப் பாடச் செய்தல். |

தொகுதி 15

# ஒற்றுமையுணர்வு


## பாடம் 1 எங்களை அறி

**கலந்துரையாடுக.**













கற்றல் தரம் 1.3.10 ▪ கூவும், கரையும், கர்ஜிக்கும், சீறும், பிளிரும், கத்தும், குரைக்கும் ஆகிய ஒலிமரபுச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு • ஒலிமரபுச் சொற்களை ஒலித்துப் பேசச் செய்தல்.

## பாடம் 2 யார் சிறந்தவர்

**வாசித்திடுக.**

ஒரு நாள் உடல் உறுப்புகள் தாமே முக்கியம் என்று வாதிட்டன. அப்பொழுது...



நடந்து நடந்து உணவு தேடுகிறேன். நான்தான் முக்கியமானவன்.

ஹா, ஹா, ஹா!... அதனைச் சுமந்து வரும் நானே பெரியவன்.





போட்டி வேண்டாம் நண்பர்களே! உணவைக் கண்டுபிடித்துக் கொடுப்பது யார்? நான்தானே?

நாம் மூவரும் சிரமப்படுகிறோம். ஆனால், இந்த வயிற்றுக்கு வேலையே இல்லை, பார்த்தீர்களா?





இனி நாம் உணவு தருவதை நிறுத்திக் கொள்வோம்.



சில நாள்கள் கடந்தன. உடல் உறுப்புகள் சோர்வாகின. வயிறுதான் உணவை உறுப்புகளுக்கு அனுப்புகிறது என்பதை உணர்ந்தன. மீண்டும் ஒற்றுமையுடன் செயல்படத் தொடங்கின.

*(ஈசாப் கதைகள்)*



கற்றல் தரம் 2.3.7
- கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.


ஆசிரியர் குறிப்பு
- கதையைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.

பாடம் 3

# திறந்த இல்லம்

**வகைப்படுத்தி வாக்கியம் அமைத்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| விளக்கு | கோலம் | பானம் | உணவு |
| முறுக்கு | நண்பர்கள் | தாத்தா | தோரணம் |



| குறில் | நெடில் |
|---|---|
| விளக்கு | கோலம் |
| | |
| | |

1. **விளக்கு** : தீபாவளியன்று வீட்டு வாசலில் **விளக்கு** ஏற்றினர்.

2. **கோலம்** : அக்காள் வண்ணக் **கோலம்** வரைந்தாள்.

கற்றல் தரம் 3.3.13 ▪ குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு • வேறு சில குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கச் செய்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




**திருக்குறள்**

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (393)**

**பொருள்**

கற்றவர்கள் கண்ணுள்ளவர்கள் எனச் சொல்லத் தகுதியுடையவர்கள். கல்லாதவர்கள் முகத்தில் இருப்பது புண்கள் எனக் கருதப்படுகின்றது.

**நடவடிக்கை 1** **வண்ணம் தீட்டிப் புத்தகக் குறியீடு செய்திடுக.**

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.




**நடவடிக்கை 2** **திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறி எழுதிடுக.**



கற்றல் தரம் 4.5.2 • நான்காம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • வகுப்பறையில் திருக்குறள் மனனப் போட்டி நடத்துவித்தல்.

# தொகுதி 16 உணவும் நலமும்

## பாடம் 1 அறிந்து கொள்வீர்

**கலந்துரையாடுக.**

| கொத்து | கட்டு | குவியல் |
|---|---|---|
|  |  |  |
| திராட்சை | விறகு | மணல் |
|  |  |  |
| பூ | வெற்றிலை | டுரியான் |
|  |  |  |
| கறிவேப்பிலை | புதினா | கல் |

1. வீட்டின் **சாவிக் கொத்துக்** காணாமல் போனது.
2. அம்மா இரண்டு **புதினாக் கட்டு** வாங்கி வந்தார்.

கற்றல் தரம் 1.3.11
- சீப்பு, கொத்து, கட்டு, குவியல் ஆகிய தொகுதிப் பெயர்களைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு
- சரியான தொகுதிப் பெயர்களைப் பயன்படுத்திப் பேசச் செய்தல்.

## பாடம் 2 உணவுகள் பலவிதம்

**வாசித்து விடை காண்க.**

பள்ளி **உணவு**ச் சந்தையில் மூன்று நண்பர்கள்...




| | |
|---|---|
| கற்றல் தரம் 2.4.7 | ▪ உரையாடல் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். |
| ஆசிரியர் குறிப்பு | • உரையாடலைப் பாகமேற்று நடிக்கச் செய்தல். |

1. உரையாடல் எதைப் பற்றியது?

உரையாடல் உணவு வகைகளைப் பற்றியது.

2. மூன்று நண்பர்களும் எங்கு உரையாடிக் கொண்டிருந்தனர்?

மூன்று நண்பர்களும் ________ .

3. இந்தியர்களின் உணவுகள் யாவை?

________ போன்றவை இந்தியர்களின் உணவாகும்.

4. சாக்கோய் எந்த இனத்தவரின் உணவு?

5. மலாய்க்காரர்களின் உணவு வகைகள் யாவை?



6. உனக்குப் பிடித்த உணவு எது? ஏன்?

7. பொருள் காண்க.

அ. உணவு ஆ. சுவை இ. சேர்ந்தே

8. இணைத்திடுக.



சீனர்





இந்தியர்





மலாய்க்காரர்



கற்றல் தரம் 2.4.7
- உரையாடல் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- பாரம்பரிய உணவுகள் பற்றிய திரட்டேடு செய்யப் பணித்தல்.

# பாடம் 3 உணவே மருந்து

**கோவையாக எழுதிடுக.**

## நான் விரும்பும் பழம்

| | | |
|---|---|---|
| **படம்** |  |  |
| **பழம்** | **கொய்யா** | **மாதுளை** |
| **நிறம்** | பச்சை | சிவப்பு |
| **ஊட்டச்சத்து** | ஏ, பி, இ, கே | ஏ, சி, இ |
| **பயன்கள்** | • மலச்சிக்கல் நீங்கும்.<br>• ரத்தசோகை குணமாகும். | • புற்றுநோயைத் தடுக்கும் வாய்ப்புண்டு.<br>• நோய் எதிர்ப்புச் சக்தி கூடும். |

நான் விரும்பி உண்ணும் பழம் கொய்யா. அதன் நிறம் பச்சை. இதில் ஊட்டச்சத்து ஏ, பி, இ, கே போன்றவை உள்ளன. கொய்யாவை உண்பதால் மலச்சிக்கல் நீங்கும். மேலும், ரத்தசோகையும் குணமாகும். இதனைப் பழச்சாறாகவும் அருந்தலாம். நான் தினமும் ஒரு கொய்யாப் பழம் சாப்பிடுவேன்.



**நடவடிக்கை 1** **கோவையாக எழுதிடுக.**



நான் விரும்பும் மாதுளை.

கற்றல் தரம் 3.4.5 • தலைப்பையொட்டிய கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • நான் விரும்பும் வாழைப்பழம் என்ற தலைப்பில் கருத்துகளைக் கோவையாக எழுத வழிகாட்டுதல்.

**நடவடிக்கை 2** **தலைப்பையொட்டிய கருத்துகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கோவையாக எழுதிடுக.**

# சமச்சீர் உணவு

சமச்சீர் உணவு உண்பது அவசியமாகும்.

தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

சமச்சீர் உணவால் உடல் நலம் பேணப்படுகிறது.

உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைக்கும்.

நண்பர்களுடன் சாப்பிடச் செல்வது அவசியமாகும்.

உடல் பருமனைத் தவிர்க்கலாம்.

துரித உணவைத் தவிர்ப்போம்.

சமச்சீர் உணவு உண்டு நலமுடன் வாழ்வோம்.

நாம் தினமும் சமச்சீர் உணவு உண்பது அவசியமாகும். ______________________

______________________________________

கற்றல் தரம் 3.4.5
- தலைப்பையொட்டிய கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- கருத்துகளைக் கோவையாக நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

அறிவாளியாக இருப்பவனே ஆற்றல் மிக்கவனாகத் திகழ்வான் என்பது அனைவரும் அறிந்ததே.

இதனை நாம் ஏமாந்த சிங்கம் எனும் கதையின்வழி அறியலாம். உருவத்தில் முயல் சிறியது. தன் புத்திக் கூர்மையால் சிங்கத்தைக் கிணற்றில் குதிக்கச் செய்த கதை இதனை உணர்த்துகின்றது.



வருடுக

**பழமொழி**

| | |
|---|---|
| **புத்திமான் பலவான்.** | அறிவாளியாக இருப்பவனே ஆற்றல் மிக்கவனாகத் திகழ்வான். |

**நடவடிக்கை 1** **புத்தகக் குறியீட்டை வண்ணம் தீட்டி அழகுப்படுத்திடுக.**

## புத்திமான் பலவான்.

**நடவடிக்கை 2** **பழமொழியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறி எழுதிடுக.**



கற்றல் தரம் 4.7.2 • நான்காம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • QR குறியீட்டின் வழி கதையை ஒளிபரப்பி நடிக்கச் செய்தல்.

## பாடம் 1 ரசிக்க ருசிக்க


**கலந்துரையாடுக.**

### பாரம்பரிய உணவு விழா

**1.9.20xx**

காலை மணி 7:00 முதல்
இரவு மணி 11:00 வரை
திறந்திருக்கும்.

- வெள்ளி – விடுமுறை
- சனி, ஞாயிறு 20% கழிவு





- 10km தூரம் வரை அனுப்பும் சேவை.
- RM100க்கு மேல் செலவு செய்தால் சிறப்புப் பரிசுகள்.





என்னோடு சேர்ந்து இன்னும் 4 சமையல்காரர்கள் உள்ளனர்.

50 வகையான உணவுகள்.

$\frac{1}{2}$ மணி நேரத்தில் உணவு தயார்.

கற்றல் தரம் 1.4.5
- எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு
- கையேட்டில் காணப்படும் தகவல்களைக் கலந்துரையாடச் செய்தல்.

**பதில் கூறிடுக.**




மாதவன் வெள்ளிக்கிழமை நண்பர்களுடன் உணவு விழாவிற்குச் செல்கிறான். அவனுக்கு எவ்வளவு கழிவு கிடைத்திருக்கும்? ஏன்?

| கற்றல் தரம் 1.4.5 | ▪ எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • எத்தனை, எவ்வளவு எனும் கேள்விகள் உருவாக்கிப் பதில் கூறச் செய்தல். |

## பாடம் 2 நெய்தல் கலை



**வாசித்து விடை காண்க.**

இளவேணி பாலன்,
தமிழ்மொழிக் கழகம்,
தஞ்சோங் லீமா தேசியப்பள்ளி,
13050 பட்டர்வொர்த், பினாங்கு.

---

இயக்குநர்,
ஸ்ரீ காஞ்சி கணபதி சில்க்,
9-ஏ, காஞ்சிபுரம்,
631501 தமிழ்நாடு.

20 மே 20XX

ஐயா,

**தமிழ்மொழிக் கழகத்தின் கல்விச் சுற்றுலா**

வணக்கம். நாங்கள், தங்களின் **சேலை** நெய்தல் நிறுவனத்திற்குக் **கல்வி**ச் சுற்றுலா மேற்கொள்ள விரும்புகிறோம்.

2. இச்சுற்றுலாவை வருகின்ற 31 ஆகஸ்டு 20XXஇல் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இதில் 20 மாணவர்களும் 4 **ஆசிரியர்**களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

3. எனவே, தங்களின் நிறுவனத்தைச் சுற்றிப் பார்க்க அனுமதி தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நன்றி,

இக்கண்,

இளவேணி
..............................
(இளவேணி பாலன்)
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம்.





கற்றல் தரம் 2.4.5
- கடிதம் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- கடிதத்தில் உள்ள விவரங்களை மனவோட்டவரைவில் படைக்கச் செய்தல்.



1. கடிதத்தை எழுதியவர் யார்?
   **கடிதத்தை எழுதியவர் இளவேணி பாலன்.**

2. கடிதம் யாருக்கு அனுப்பப்படுகிறது?

3. இக்கடிதம் எப்பொழுது எழுதப்பட்டது?

4. இளவேணி ஏன் இக்கடிதத்தை எழுதினாள்?

5. எப்பொழுது இச்சுற்றுலா மேற்கொள்ளப்படும்?

6. எத்தனை பேர் இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்கின்றனர்?

7. சரியான பொருளுக்கு வட்டமிடுக.

   (i) கல்வி
   அ. பாடசாலை ஆ. படிப்பு

   (ii) சேலை
   அ. தாவணி ஆ. புடவை

   (iii) ஆசிரியர்
   அ. இயக்குநர் ஆ. ஆசான்

8. இச்சுற்றுலாவில் நீ கலந்து கொள்ள விரும்புகிறாயா? ஏன்?



கற்றல் தரம் 2.4.5
- கடிதம் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- வேறு ஒரு கடிதம் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் அளிக்கச் செய்தல்.

பாடம் 3

# அனுபவம் புதிது



**கோவையாக எழுதிடுக.**

ஏகபூசணாவின் சமையல் குறிப்பு:





- இன்று அம்மாவுடன் முறுக்கு செய்ய எண்ணினேன்.
- தேவையான பொருள்களைத் தயார் செய்தோம்.
- முறுக்கு மாவை அம்மாவின் துணையுடன் பிசைந்தேன்.
- முறுக்குக் குழாயில் மாவைப் போட்டுப் பிழிந்தேன்.
- வாணலி - பொரித்தேன்.
- உண்டு - மகிழ்ந்தேன்.







**இடைச்சொற்கள்**

- முதலில்
- பிறகு
- அடுத்து

இன்று அம்மாவுடன் முறுக்கு செய்ய எண்ணினேன்.
முதலில், தேவையான பொருள்களைத் தயார் செய்தோம்.

கற்றல் தரம் 3.4.7 ▪ அனுபவத்தை 30 சொற்களில் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • சமையல் செய்த அனுபவத்தைக் கோவையாக எழுத வழி காட்டுதல்.

பாடம் 4

# இலக்கணம்

**கலந்துரையாடுக.**

**படர்க்கை**

பேசுபவர், கேட்பவரைத் தவிர்த்து மற்றப்பெயர்கள் படர்க்கை எனப்படும்.

படர்க்கை

- **அவன்**
- **அவை**
- **அது**
- **அவள்**
- **அவர்கள்**
- **கண்ணன்**

**அவன்** காற்பந்து விளையாடுகிறான்.

**அவர்கள்** பள்ளிவாசல் சென்றனர்.

**அது** வெள்ளைப் பூனை.

**நடவடிக்கை** **நிறைவு செய்திடுக.**

1. **அவன்** இனிமையாகப் பாடினான்.
2. ______ என்ன செய்கிறார்கள்?
3. ______ ஓவியம் வரைந்தாள்.
4. ______ பறந்து சென்றன.
5. ______ புதிய மடிக்கணினி.
6. ______ கணித ஆசிரியர்கள்.





கற்றல் தரம் 5.2.8 ▪ தன்மை, முன்னிலை, படர்க்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


ஆசிரியர் குறிப்பு • படர்க்கைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கத் தூண்டுதல்.

# தொகுதி 18 காலங்கள்

## பாடம் 1 எங்கள் நேரம்

**விவரங்களைக் கூறிடுக.**

தாமான் செனா தேசியப்பள்ளி நான்காம் ஆண்டு மாணவர்கள்




- பள்ளி
- மாணவர் எண்ணிக்கை
- அதிகம்
- குறைவு
- சமம்
- விழுக்காடு
- உன்னைக் கவர்ந்தவை

- **இக்குறிவரைவு நான்காம் ஆண்டு மாணவர்கள் விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது.**


கற்றல் தரம் 1.5.3 ▪ குறிவரைவில் உள்ள விவரங்களைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • குறிவரைவில் உள்ள விவரங்களைக் கூறச் செய்தல்.

## பாடம் 2 பருவங்கள் நான்கு

**வாசித்துப் பதிலளித்திடுக.**

பருவகாலம் நான்கு வகைப்படும். அவை இளவேனில், கோடை, இலையுதிர் மற்றும் குளிர்காலம் ஆகும். இளவேனிற் காலத்தில் பூக்கள் பூத்துக் குலுங்கும். கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இதனைக் காணலாம். கோடை என்பது வெப்பம் மிகுந்த காலமாகும். ஆப்பிரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இக்காலத்திற்கு உரியவை. கோடை முடிந்து குளிர் தொடங்கும் முன் இலையுதிர் காலம் ஏற்படும். இலையுதிர் காலத்தைக் கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளில் அனுபவிக்கலாம். குளிர்காலத்தைப் பனிக்காலம் என்றும் அழைப்பர். இந்தக் காலங்களில் இரவு அதிகமாகவும் பகல் குறைவாகவும் காணப்படும். நோர்வேய், சுவிடன் நாடுகள் இதற்கு உதாரணமாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| |  |  |  |  |
| காலம் | ____ | கோடை | ____ | ____ |
| நாடு | ____ | ____ | ____ | • நோர்வேய்<br>• சுவிடன் |
| தன்மை | ____ | ____ | கோடை முடிந்து குளிர் தொடங்கும்போது ஏற்படும் | ____ |



கற்றல் தரம் 2.2.6
- பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

ஆசிரியர் குறிப்பு
- பருவங்கள் தொடர்பான படங்களைச் சேகரிக்கச் செய்தல்.

பாடம் 3

# மாதங்கள் அறிவோம்

**வாசித்து நிறைவு செய்திடுக.**


## தமிழ் மாதங்கள்

**சித்திரை வைகாசி**
நன்றே நீ வாசி
**ஆனி ஆடி**
நல்லதைப் பற்றி யோசி
**ஆவணி புரட்டாசி**
அனைவரையும் நீ நேசி!

**ஐப்பசி கார்த்திகை**
படிப்பில் கவனம் வை
**மார்கழி தை**
வார்த்தையில் தெளிவு வை
**மாசி பங்குனி**
மனதில் உறுதி வை!

*(கலைவாணி)*



## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




| | |
|---|---|
| **உலகநீதி** | **ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்** |
| **பொருள்** | யாரைப் பற்றியும் தீமை பயக்கும் சொற்களைச் சொல்லக்கூடாது. |

**நடவடிக்கை 1** **தீமை பயக்கும் சொற்களுக்கு (✗) என அடையாளமிடுக.**

| | | |
|---|---|---|
| நல்லவன் ◯ | முட்டாள் ◯ | வணக்கம் ◯ |
| திருடன் ◯ | கெட்டவன் ◯ | பாராட்டுகள் ◯ |

**நடவடிக்கை 2** **உலகநீதியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறி எழுதிடுக.**

கற்றல் தரம் 4.9.1 ▪ நான்காம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • உலகநீதியையும் அதன் பொருளையும் பாடலாக ஒப்புவிக்கச் செய்தல்.

## தொகுதி 19 சுட்டிகள் உலகம்

### பாடம் 1 நீச்சல் குளம்

**கலந்துரையாடிக் கூறிடுக.**




| | |
|---|---|
| கற்றல் தரம் 1.5.4 | ▪ அறிவிப்பில் உள்ள விவரங்களைக் கூறுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • அறிவிப்பில் காணும் குறியீடுகளை வரைந்து வண்ணமிடச் செய்தல். |



# பாடம் 2 அரும்புகள் விழா

**வாசித்து விடை காண்க.**

## பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி

## அரும்புகள் விழா 20XX

20 அக்டோபர் 20XX

பெஸ்தாரி மண்டபம், சிரம்பான்

RM20.00 மட்டுமே

6 – 12 வயது குழந்தைகள்













தொடர்புக்கு:
திருமதி கனிலா: 011-1122343

ஏற்பாட்டாளர்:
**குகன் அறக்கட்டளை**



கற்றல் தரம் 2.4.4 ▪ அறிவிப்புத் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • வகுப்பறையில் அறிவிப்பாகப் போலித்தம் செய்யப் பணித்தல்.




8. பொருள் காண்க.

வயது - ______

ஓவியம் - ______

நடனம் - ______

9. வேறு எவ்வகையான நடவடிக்கைகளை இணைத்துக் கொள்ளலாம் என நினைக்கிறாய்? ஏன்?

## பாடம் 3 காத்திருந்த நேரம்

**கோவையாக எழுதிடுக.**





**சூழல்**

அவினாஷ் வெளிநாடு செல்ல குடும்பத்தோடு விமான நிலையம் வந்தான். விமானத்தில் ஏறுவதற்காக ஆவலுடன் காத்திருந்தான். அச்சூழலில்...

BOARDING PASS — Air Company — ECONOMY

அப்பா – கடந்து செல்லும் சீட்டு – பயணிகள் – காத்திருந்தனர் – அண்ணன் – குளிர்பானம் – அம்மா – தங்கை – உணவு –அவினாஷ் – விமானம் – மகிழ்ந்தான்.

அவினாஷ் வெளிநாடு செல்ல குடும்பத்தோடு விமான நிலையம் வந்தான். அப்பா கடந்து செல்லும் சீட்டுப் பெற்று வந்தார்.

______________________________

______________________________

| கற்றல் தரம் 3.4.6 | ▪ சூழலுக்கேற்ற கருத்துகளை 30 சொற்களில் கோவையாக எழுதுவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • கருத்துகளை விரிவுபடுத்தி 30 சொற்களில் கோவையாக எழுதப் பணித்தல். |

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**



அனைத்துலகப் பனிச்சறுக்குப் போட்டியில் தங்கம் வென்றார் ஸ்ரீஅபிராமி. இச்செய்தி மலேசிய மக்களிடையே **காட்டுத் தீ போல** பரவியது.



ஜனனியும் லாவண்யாவும் சகோதரிகள். **நகமும் சதையும் போல** நெருங்கிப் பழகும் அவர்களின் உறவு பெற்றோருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

| உவமைத்தொடர் | பொருள் |
|---|---|
| **காட்டுத் தீ போல** | - ஒரு செய்தி விரைவாகப் பரவுதல் |
| **நகமும் சதையும் போல** | - மிக நெருக்கமாக |

**நடவடிக்கை** **நிறைவு செய்திடுக.**

1. கவிதை ஒப்புவிப்புப் போட்டியில் விஷாலினி வெற்றி பெற்ற செய்தி ______ பரவியது.

2. ரகு ______ நெருங்கிப் பழகிய நண்பனை வரவேற்க விமான நிலையத்திற்குச் சென்றான்.



கற்றல் தரம் 4.8.1
- நான்காம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் சுவரொட்டியாகச் செய்து பார்வைக்கு வைக்கச் செய்தல்.

தொகுதி 20

# சுகாதாரம்

## பாடம் 1 மலை ஏறுவோம்

**கலந்துரையாடுக.**




| கற்றல் தரம் 1.3.9 | ▪ தனிப்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • தனிப்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசத் தூண்டுதல். |


# பாடம் 2 தூய்மை



**வாசித்திடுக.**

**சொர்க்கம் என்பது நமக்கு**
**சுத்தம் உள்ள வீடுதான்**
**சுத்தம் என்பதை மறந்தால்**
**நாடும் குப்பை மேடுதான்!**

*(கவிஞர் வாலி)*





**உடையினில் தூய்மை – உண்ணும்**
**உணவினில் தூய்மை – வாழ்வின்**
**நடையினில் தூய்மை – உந்தன்**
**நல்லுடல் தூய்மை – சேர்ப்பின்**
**தடையில்லை வாழ்நாள் – ஒவ்வொன்றும்**
**இன்பம் தரும்நாள் ஆகும்.**

*(பாரதிதாசன்)*

வருடுக



கற்றல் தரம் 2.3.6 ▪ கவிதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • கவிதை வரிகளைப் பாடலாகப் பாடச் செய்தல்.

# பாடம் 3 பார்த்தாலே பரவசம்

**வாக்கியம் அமைத்திடுக.**



1. வாத்துகள் குளத்தில் நீந்தின.
2. பறவைகள் மரக்கிளையில் அமர்ந்திருந்தன.
3. சிறுவர்கள் வண்ணத்துப் பூச்சியைப் பிடிக்க முயன்றனர்.

கற்றல் தரம் 3.3.15 ▪ தனிப்படத்தையொட்டி வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு • படத்தையொட்டி வேறு சில வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்.


## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

**இடம்**

- பேசுவோரின் இடத்தைக் குறிப்பது இடம்.
- இடம் மூவகைப்படும். அவை:-

| | |
|---|---|
| **தன்மை** | நான், என், நாங்கள், எங்கள், யான், யாம் |
| **முன்னிலை** | நீ, நீங்கள், உன், உமது, நீர், நீவிர், உங்கள் |
| **படர்க்கை** | அவன், அவள், அது, அவர்கள், அவை, கண்ணன் |



**நடவடிக்கை** **சரியான விடையைத் தெரிவு செய்து எழுதிடுக.**

பரதனும் பாலனும் **என்** / உன் வீட்டிற்கு வந்தனர். நாங்கள் / எங்கள் அருகிலுள்ள திடலுக்கு விளையாடச் சென்றோம். அங்குப் பல சிறுவர்கள் / கண்ணன் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது குமரன் / சாந்தி அங்கு வந்தான். “ உன் / நீ அண்ணன் எங்கே?” என்று என்னிடம் கேட்டான்.

கற்றல் தரம் 5.2.8
- தன்மை, முன்னிலை, படர்க்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொற்களைக் கொண்டு வாய்மொழியாக வாக்கியம் அமைக்கப் பணித்தல்.

# தொகுதி 21 சமூகம்

## பாடம் 1 இது சரியா

**கருத்துகளைக் கூறிடுக.**

### சூழல் 1

அப்பா : சிவா, உணவைச் சாப்பிட்டு முடித்து விடு. வீணாக்காதே!

சிவா : வயிறு நிறைந்து விட்டது அப்பா, போதும்!

அப்பா : பலர் உணவின்றித் தவிக்கின்றனர்.

அம்மா : இனிமேல் உன் தேவைக்கு ஏற்ப உணவை எடுத்துக் கொள்.






### சூழல் 2

மகன்: அப்பா, எனக்கு இந்தக் காலணிதான் வேண்டும்.

அப்பா: வேண்டாம். உன்னிடம் ஏற்கனவே இதே போன்று விலை உயர்ந்த காலணிகள் உள்ளன. இல்லாதவரை நினைத்துப் பார்.


கற்றல் தரம் 1.2.11 ▪ செவிமடுத்த உரையாடலில் உள்ள கருத்துகளைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு • மேற்கண்ட உரையாடலைப் போலித்தம் செய்யப் பணித்தல்.

## பாடம் 2

# பூமி நேரம்

**வாசித்து விடை காண்க.**




வசந்தி : ஏன் திடீரென்று விளக்குகளை அணைத்து விட்டாய்?

ஆயு : இன்று மார்ச் மாதம் **கடைசி** சனிக்கிழமை. **பூமி** நேரம் ஆகும். இரவு 8:30 மணியிலிருந்து 9:30 மணி வரை மின் விளக்குகளை அணைக்க வேண்டும்.

வசந்தி : அப்படியா, ஏன்?

ஆயு : இயற்கையைப் **பாதுகாக்க** இதுவும் ஒரு வழி ஆகும்.

1. யார் உரையாடலில் பங்கெடுத்துள்ளனர்?
2. இந்த உரையாடல் எதைப் பற்றியது?
3. எப்பொழுது பூமி நேரம் அனுசரிக்கப்படுகிறது?
4. எவ்வளவு நேரம் விளக்குகளை அணைக்க வேண்டும்?
5. நீ இயற்கையை எவ்வாறு பாதுகாப்பாய்?
6. பொருள் காண்க.

பூமி | கடைசி | பாதுகாக்க

கற்றல் தரம் 2.4.7
- உரையாடல் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- பூமி நேரம் தொடர்பான விவரங்களைத் தேடிப் படைக்கச் செய்தல்.

## பாடம் 3 வங்கி

**சொல்லை விரிவுபடுத்தி வாக்கியம் அமைத்திடுக.**


**உண்டியல்**

இஃது உண்டியல்.

இது சேவல் உண்டியல்.

இஃது அழகிய சேவல் உண்டியல்.

இஃது அழகிய நீல நிறச் சேவல் உண்டியல்.






**வங்கி**


நான் வங்கிக்குச் சென்றேன்.

நான் பட்டணத்திலுள்ள வங்கிக்குச் சென்றேன்.

நான் பட்டணத்திலுள்ள பெரிய வங்கிக்குச் சென்றேன்.


நான் பட்டணத்திலுள்ள பெரிய வங்கிக்கு அப்பாவுடன் சென்றேன்.

**நடவடிக்கை** **வாக்கியம் அமைத்திடுக.**




கற்றல் தரம் 3.3.16
- சொல்லை விரிவுபடுத்தி வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- வேறு சில சொற்களை விரிவுபடுத்தி வாக்கியம் அமைக்கப் பணித்தல்.



# பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

| மூன்றாம் வேற்றுமை | நான்காம் வேற்றுமை |
|---|---|
| ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | கு |
| பரதன் + ஆல் = பரதனால் | பரதன் + கு = பரதனுக்கு |
| பரதன் + ஓடு = பரதனோடு | |
| பரதன் + உடன் = பரதனுடன் | |
| பரதன் + ஒடு = பரதனொடு | |

**நடவடிக்கை 1** **சேர்த்து எழுதிடுக.**

முனிவர் + ஓடு = முனிவரோடு

1. நண்பன் + உடன் = ________
2. மான் + கு = ________
3. குச்சி + ஆல் = ________
4. அகிலா + ஒடு = ________

**நடவடிக்கை 2** **உருபுகளை இணைத்து எழுதிடுக.**

தர்வின் **பறவை** இரை போட்டான்.
தர்வின் **பறவைக்கு** இரை போட்டான்.

1. பிரபா **கடை** சென்றாள்.
2. குதிரை தன் **கால்** குரங்கை உதைத்தது
3. ஆதவன் **தம்பி** கடலுக்குச் சென்றான்.
4. ரஞ்சினி **தங்கை** நடனம் ஆடினாள்.

கற்றல் தரம் 5.2.7
- மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- மூன்றாம், நான்காம் வேற்றுமை உருபுகளை ஏற்ற வாக்கியங்களை நாளிதழில் அடையாளங்கண்டு எழுதச் செய்தல்.

## தொகுதி 22 நம்மைச் சுற்றி

### பாடம் 1 அப்பா என் உயிர்

**செவிமடுத்துக் கூறிடுக.**




கபிலனும் அப்பாவும் மகிழுந்தைக் கழுவிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது, கபிலன் சிறு கல்லால் மகிழுந்தின் கதவில் கிறுக்கிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த அப்பாவுக்குக் கோபம் வந்தது. “இப்படிச் செய்யலாமா கபிலா?” என்று தன் மகனை அடிக்கக் கையை ஓங்கினார்.

மகிழுந்தின் கதவில் ‘அப்பா என் உயிர்’ என்ற வாசகத்தைப் பார்த்தார்; மனம் நெகிழ்ந்தார். கோபம் தணிந்து தன் மகனை அணைத்து, முத்தம் கொடுத்தார்.


“கபிலா, இனிமேல் இவ்வாறு செய்யக் கூடாது,” என்று அறிவுரை கூறினார்.

| | |
|---|---|
| கற்றல் தரம் 1.2.9 | ▪ செவிமடுத்த கதையைக் கூறுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • செவிமடுத்த கதையை நடிக்கச் செய்தல். |

## பாடம் 2 அறிஞர்களை அறிவோம்

**வாசித்து விடை காண்க.**

மகாகவி பாரதியார் 1882 டிசம்பர் 11இல் பிறந்தார். இவர் கவிஞராகவும் எழுத்தாளராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தார். இவருக்குப் ‘பாரதி’ எனும் பட்டம் 11ஆவது வயதில் கிடைத்தது. இவர் பல மொழிகளில் புலமை பெற்றவர். தமது 39ஆவது வயதில் இயற்கை எய்தினார்.





அழ. வள்ளியப்பா 7 நவம்பர் 1922இல் பிறந்தார். இவரைக் குழந்தைக் கவிஞர் என்பர். 2000க்கும் மேற்பட்ட குழந்தைப் பாடல்களை எழுதியுள்ளார். பகுதிநேர பத்திரிகை ஆசிரியராகத் திகழ்ந்தார். 1982இல் ‘தமிழ்ப் பேரவை செம்மல்’ பட்டம் பெற்றார். தனது 66ஆவது வயதில் காலமானார்.


| | **அறிஞர்களை அறிவோம்** |  |  |
|---|---|---|---|
| 1. | 11.12.1882இல் பிறந்தார். | ✓ | ____ |
| 2. | சிறந்த கவிஞர் ஆவார். | ✓ | ✓ |
| 3. | 7.11.1922இல் பிறந்தார். | ____ | ____ |
| 4. | பல மொழிகளில் புலமை பெற்றவர். | ____ | ____ |
| 5. | 2000க்கும் மேற்பட்ட குழந்தைப் பாடல்களை எழுதியவர். | ____ | ____ |
| 6. | பட்டம் பெற்றவர். | ____ | ____ |
| 7. | 39ஆவது வயதில் காலமானார். | ____ | ____ |

கற்றல் தரம் 2.2.6 ▪ பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

ஆசிரியர் குறிப்பு • கவிஞர்கள் பற்றிய தன் குறிப்பு எழுதச் செய்தல்.

# சிறு தொழில்

**வாக்கியம் அமைத்திடுக.**




1. **அப்பா** சிறு தொழில் **செய்கிறார்**.

2. **ஆடுகள்** புல் **மேய்ந்தன**.


3. ________________

கற்றல் தரம் 3.3.14
- உயர்திணை, அஃறிணைக்கேற்ப வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- கூடுதல் வாக்கியம் அமைக்க வழிகாட்டுதல்.

# இலக்கணம்

**கலந்துரையாடுக.**




## நடவடிக்கை 1 சேர்த்து எழுதிடுக.

1. அந்த + பாடம் = **அந்தப் பாடம்**
2. இந்த + தலைவன் = ________
3. எந்த + குறிப்பு = ________
4. அந்த + சிரிப்பு = ________
5. இந்த + கோலி = ________
6. எந்த + பை = ________

## நடவடிக்கை 2 வலிமிகுந்து எழுதிடுக.

1. அந்த சட்டியை இங்கு வைக்காதே!

   **அந்தச் சட்டியை** இங்கு வைக்காதே!

2. இந்த பாதையில் பேருந்து சென்றது.
3. கிளிகளை எந்த கூண்டில் பார்த்தாய்?
4. எந்த சிலை உனக்கு வேண்டும்?
5. மாணவர்கள் அந்த திடலில் விளையாடுகின்றனர்.

கற்றல் தரம் 5.4.2 ▪ அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு • அந்த, இந்த, எந்த என்பனவற்றுக்குப்பின் வலிமிகுந்து வரும் வாக்கியங்களைப் பார்த்து எழுதச் செய்தல்.

# மீட்டுணர்வோம்

**1. குறள்களை முறைப்படுத்தி எழுதிடுக.**

கற்றபின் | கற்பவை | கற்க | கசடறக்
அதற்குத் | தக | நிற்க

முகத்திரண்டு | கற்றோர் | கண்ணுடையர் | என்பவர்
கல்லா | தவர் | புண்ணுடையர்

**2. விடை காண்க.**

அ. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

ஆ.

படிக்காமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது.

**3. அகராதியின் துணையுடன் பொருளை எழுதிடுக.**

நடனம் -

கரி -

வீடு -

அரசன் -

**4.** **கலந்துரையாடுக.**



**5.** **தமிழ் மாதங்களின் பெயர்களை அடையாளம் காண்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| கா | ர் | த் | தி | கை |
| ப | ழி | சி | மு | தொ |
| ங் | அ | த் | வை | டு |
| கு | சு | தி | கா | சி |
| னி | நா | ரை | சி | மா |
| மா | ஆ | னி | ப | சி |
| ர் | மை | கோ | ப் | ர் |
| க | டி | தை | ஐ | போ |
| ழி | ஆ | வ | ணி | கு |
| பு | ர | ட் | டா | சி |

Dengan ini, SAYA BERJANJI akan menjaga buku ini dengan baiknya dan bertanggungjawab atas kehilangannya, serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan.

Skim Pinjaman Buku Teks

Sekolah ______________________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Nombor Perolehan: ______________________________

Tarikh Penerimaan: ______________________________

BUKU INI TIDAK BOLEH DIJUAL

RM24.80

ISBN 978-983-49-2482-9

9 789834 924829

BT044001